சுந்தர ராமாயணம்



51. இருவேறு கலையுலகம்

இலங்கையிலே அனுமன் ஈடுபட நேர்ந்த போராட்ட விவரங்களில் எல்லாம் ஆதிகாவியத்துடன் கம்பசித்திரம் மாறுபடுவதை வாசக நேயர்கள் ஏற்கெனவே தெரிந்து கொண்டிருப்பார்கள். அட்சகுமாரன் வதத்தை இரு பெருங் காவியங்களில் ஒப்பிட்டுப் படித்தாலும் வால்மீகியின் இதிகாச பாணி வேறு, கம்பனின் வீர காவிய பாணி வேறு என்பது நன்கு புலனாகும்.

இந்திரஜித்து வந்து அனுமனைப் பிரமாஸ்திரத்தால் கட்டுவதாகிய 'பாசப் படல' வரலாற்றிலும் ஒற்றுமையைக் காட்டிலும் வேற்றுமைகளையே அதிக அளவில் காண்கிறோம். எடுத்த எடுப்பிலேயே வேற்றுமை தான்.

வேற்றுமை விவரங்கள்

அட்சகுமாரன் அனுமனால் வதமானது கேட்டு ராவணன் தன் துக்கத்தை வெளியில் காட்டாமல் உள்ளத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு, இந்திரஜித்தை வெகு கோபத்துடன் ஏவியதாகக் கூறுகிறது வால்மீகம். அப்போது ராவணன் இந்திரஜித்தை நோக்கி ஒரு பிரசங்கமே செய்வது போலப் பேசினான். இந்திரஜித்து எந்தப் பிரமாஸ்திரத்தால் அனுமனைக் கட்டப் போகிறானோ அந்தப் பிரமாஸ்திரத்தையும் குறிப்பிட்டு ராவணன் பேசினான். இந்திரஜித்து தந்தையைப் பிரதட்சிணம் செய்து விட்டு அட்டகாசம் செய்த வண்ணம் சிங்கங்கள் பூட்டிய தேரில் சென்றான்.

கம்ப ராமாயணத்திலோ இந்திரஜித்தே ராவணனை வந்து பார்த்தான். காலில் விழுந்து தம்பிக்காகத் துயர் கொண்டு புலம்பினான்.

> கொன்றனை நீயே
> அன்றோ அரக்கர்தம்
> குழுவை எல்லாம்?

என்றெல்லாம் தந்தையையும் கண்டித்துப் பேசுவது போல் தன் கோபத்தை வெளியிட்டுக் கொண்டான். கடைசியாகக் கோபத்தை அடக்கிக் கொண்டு உறுதி கூறிப் போருக்குச் சென்றான்.

அனும - இந்திரஜித்தர்களின் யுத்த வருணனைப் போக்கிலும் வேற்றுமைகளைக் காண்கிறோம். இந்திரஜித்து போர்க்களக் கொடுமைகளைப் பார்த்துக் கொண்டே போவதும், அனுமனின் திறமையை வியப்பதும், சிந்தை கொள்வதும், ரோஷங் கொள்வதும், அத்தையை நினைத்தும் தம்பியை நினைத்தும் தன்னைத் தானே வெறுத்துக் கொள்வதும், பல பிணங்களிடையே தம்பி உடலைக் கண்டு சோகமும் கோபமும் கொள்வதும் எல்லாம் கம்பனின் கற்பனை தான். வீரவாத உரையாடலும் சொந்தச் சரக்கே.

இந்தப் போராட்டத்திலே நல்ல இரை கிடைக்குமென்று பறவைகள் உரக்கக் கூவி மகிழ்ந்ததாகவும், தேவதைகளும் நாக - யட்ச - சித்தர்களும் மாமுனிவர்களும் கூட்டங் கூட்டமாய் வான வீதியில் நின்று பார்த்ததாகவும் வால்மீகி கூறியுள்ளார். அனுமன் தன் உடம்பை விருத்தி செய்துகொள்ள, இந்திரஜித்து இடிபோல் நாணோசை எழுப்பி அம்புகளைப் பிரயோகித்தான். பாணங்களை அனுமன் தன்மேல் விழா

மல் செய்து கொண்டான. இருவர் மர்மங்களையும் இருவரும் அறிந்து கொள்ளாமலே பிறரால் சகிக்க முடியாத போரைத் தொடர்ந்து நடத்தினர்கள்.

குறி வைத்து அடிப்பதில் ஏகாக்கிர சித்தமாகவும் அதி ஜாக்கிரதையாகவும் இருப்பவன்தான் இந்திரஜித்து. தான் பிரயோகித்த பாணங்கள் தன் திட்டப்படியே அனுமன் மேல் விழுவதையும் கண்டு கொண்டான். 'எனினும் எப்படியோ அனுமன் என் அம்புகளுக்கு இரையாகாமல் தப்பி விடுகிருனே!' என்று ஆச்சரியப்பட்டான். எனவே, 'இவனைப் பாணங்களால் கொல்ல முடியாது; பிரமாஸ்திரம் ஒன்றே இவனைக் கட்டக்கூடியது' என்று தீர்மானித்து அப்படியே கட்டி விட்டான். இப்படி வால்மீகி சொல்லக் கம்பனே வேருெரு விதமாகக் கதையை வளர விடுகிருன்.

இந்திரஜித்தின் சதுரங்க சேனை அழிக்கப்பட்டதும், வீரவாதம் செய்த பின்பு அனும-இந்திரஜித்தர் போராட்டம் பல பாடல்களில் வருணிக்கப்படுகிறது. இந்திரஜித்து அம்புகள் போடப்போட அனுமன் விசுவரூபம் கொள்வதும், இந்திரஜித்தின் தேர்க் குதிரைகளையும் பாகனையும் அழிப்பதும், வில்லை முறிப்பதும், இந்திரஜித்து வேருெரு வில்லை எடுத்து அம்புகளை வீச அனுமன் சற்றுத் தளர்வதும், உடனே அயர்ச்சி தீர்ந்து ஒரு மரத்தால் இந்திரஜித்தின் தலையில் அடித்து அவனைத் தளரச் செய்வதும், இந்திரஜித்து அயர்ச்சி தீர்ந்து மீண்டும் அம்பு போட அவனை அனுமன் தேரோடு தூக்கி வீசுவதும் எல்லாம் கம்பன் கண்ட கதைதான்.

பிரமாஸ்திர விவரங்கள்

இனி, இந்தப் போரின் இறுதி அம்சமாகிய பிரமாஸ்திரப் பிரயோக விவரத்தையும் இரண்டு காவியங்களில் காண்போம். வேறு அஸ்திரங்களால் அனுமன் மரணம் அடையான் என்று தெரிந்து கொண்ட இந்திரஜித்து பிரமாஸ்திரத்தால் கட்டியதும், அனுமன் சேட்டையற்று நிலத்தில் விழுந்ததாகக் கூறுகிருர் வால்மீகி. வால்மீகத்தில் இந்தக் கட்டம் குறித்துப் பண்டிதர்களுக்குள்ளே கொஞ்சம் கருத்து வேற்றுமை இருப்பதாகத் தெரிகிறது.

தான் பிரமாஸ்திரத்தால் கட்டுப்பட்டிருப்பதையும், அதனுல் தன் வேகம் அடங்கினதையும் அனுமன் உணர்ந்து கொண்டதாக வால்மீகி கூறியிருப்பது தெளிவு. பிரமாஸ்திரத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளத் தனக்குச் சக்தி கிடையாது என்றும் அனுமன் எண்ணினுன். பிரம்மாவின் ஆணைக்குத் தான் கட்டுப்பட வேண்டியது என்றும் கருதினுன். பிரம்மா முதலானவர்கள் தனக்கு வரம் கொடுத்திருப்பதால் தனக்குக் கொஞ்சமும் பயமில்லை என்றும் தனக்குள் தானே சொல்லிக் கொண்டான்.

இப்படியெல்லாம் எண்ணமிடும் அனுமன், 'இந்த அரக்கர்கள் என்னைக் கட்டிக் கொண்டு போவதும் லாபம் தான். ராவணனைக் கண்டு பேசி அவனுடைய குணங்களையும் பராக்கிரமங்களையும் நன்ருய் அறியலாம்' என்று அசைவற்றிருந்தான்.

பிரமாஸ்திரத்தை உள்ளிட்ட எந்த அஸ்திரமும் அனுமனைக் கட்ட முடியாது என்பதும், ராவணனைச் சந்திப்பதற்கு ஓர் உபாயமாகவே அனுமன் தானுகக் கட்டுப் பட்டான் என்பதும், வால்மீகிக்கு ராம கதையை உபதேசித்த நாரத வாக்கியத்திலிருந்து புலனுகும் என்பர். பிரமாஸ்திரத்தைப் போக்கடிக்கும் சக்தி தனக்கு இருப்பதாய் அனுமன் உணர்வதும் கவனிக்கத் தக்கது.

இந்த விவகாரத்தை மேலும் கூர்ந்து நோக்க விரும்புவோர் 'வால்மீகி முனி ஹ்ருதய தத்வஸார ப்ரகாசிகா' என்னும் நூலில் 315-325 பக்கங்களைப் பார்த்துக் கொள்ளலாம்.

அனுமன் தானுகவே கட்டுப் பட்டு அசைவற்றிருந்த போது அரக்கர்கள் நெருங்கி வந்து சணல் கயிறு முதலியவற்ருல் அனுமனை இறுக்கிக் கட்டினுர்கள்; மிரட்டினுர்கள். பிரமாஸ்திரம்



கட்டியிருக்கும் போது வேறொரு கட்டையும் அது பொறுப்பதில்லை, உடனே அஸ்திரம் விட்டுப் போகும் என்பது இந்த அஸ்திர மர்மம். இந்த மர்மம் அஸ்திர லட்சணங்களை நன்கறிந்த இந்திரஜித்துக்குத் தெரியும்.

எனவே 'அருமையான அஸ்திரம் வீணாகி விட்டதே; காரியம் கெட்டுப் போயிற்றே; இந்த அஸ்திரத்தை மறுபடியும் பிரயோகிக்க முடியாதே' என்று இந்திரஜித்து மனங்கலங்கினான். அனுமனோ அப்போது விடுபட்டதாய்த் தெரிந்து கொள்ளா விட்டாலும் கொஞ்ச நேரம் கழித்துத் தான் விடுபட்டதை அறிந்து கொண்டான்.

அறிந்தும், அரக்கர்கள் தன்னைக் கட்டி யிருப்பதையும், தடிகளால் அடிப்பதையும், முஷ்டிகளால் குத்துவதையும் பொறுத்துக் கொண்டிருந்தான். இந்த நிலையில் அனுமனை ராவணன் இருக்குமிடத்திற்குக் கொண்டு போனார்கள் என்பது வால்மீகி கதை.

கம்பன் கதையிலே பிரமாஸ்திரத்தைப் பிரயோகிக்கக் கருதிய இந்திரஜித்து அந்த அஸ்திரத்தைப் பூஜித்து எடுத்ததாக வருகிறது. ஷோடசோப சாரங்களில் புஷ்பம் தூபம் தீபம் நைவேத்தியம் என்ற நான்கு உபசாரங்களையும் அஸ்திரத்திற்கு இந்திரஜித்து செய்ததாக வருகிறது. ஆனால் போருக்கிடையே இத்தகைய பூஜை உபசாரங்களுக்கு அவகாசம் கிடைக்குமா? எனவே பாவனையில் மானஸமாக உபசாரங்களைச் சமர்ப்பித்துப் பூஜை புரிந்ததாகக் கம்பன் கூறுகிறான்:


தாவில் பாவனை-
யால்கொடுத்(து) அருச்சனை
சமைத்தான்.

[தாவில் - தவறுதல் இல்லாத. அருச்சனை சமைத்தான் - பூஜை செய்தான்.]

அனுமனுடைய தோள்களைக் கட்டுமாறு மந்திரம் ஜபித்துப் பிரயோகித்தான் இந்திரஜித்து என்பது குறிப்பு. இந்தப் பூஜை விவரங்கள் வால்மீகத்தில் இல்லை. மந்திரம் ஜபித்து விட்டது மட்டும் வெளிப்படையா யிருக்கிறது.

பிரமாஸ்திரம் ஒரு மகாநாகத்தின் வடிவம் கொண்டு அனுமன் தோள்களை இறுகக் கட்டிற்று என்பதும் கம்பன் கற்பனைதான். அஸ்திரம் கட்டித் திருக அனுமன் சாய்ந்து விழுந்ததாகக் கம்பன் தெளிவாய்க் கூறுகிறான். எனினும் பிரமாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டுக் கீழே விழுந்த அனுமன் மூர்ச்சித்துப் போகவில்லை என்பதுதான் கம்பன் கதையும்.

தன் மேல் பிரயோகிக்கப்பட்டது பிரமாஸ்திரம்தான் என்பதை ஆராய்ந்து அறிந்து கொண்டான். 'இதன் ஆணையை அவமதித்து விடுபட்டுப் போவது தக்கதன்று' என்று தீர்மானித்தான். தீர்மானித்துத் தானாகவே அந்த அஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டுக் கண்களை மூடிக்கொண்டிருந்தான்.



அந்த நிலையில் 'இந்த வானரனுடைய வலிமை ஓய்ந்து விட்டது' என்று இந்திரஜித்து வந்து நெருங்கினன். இந்தக் கதையம்சத்தில் மட்டும் கம்பன் வால்மீகத்தைப் பின் பற்றுவதாகத் தோன்றுகிறது.

ஆனல் அஸ்திரம் மகா நாகவடிவமாய்க் கட்டியது என்பதற்கோ, அந்தப் பாம்பைப் பிடித்து அரக்கர்கள் இழுத்தார்கள் என்பதற்கோ, அது கரு நிறமுள்ள பெரும் பாம்பு என்பதற்கோ வால்மீகத்தில் ஆதாரம் துளியுமில்லை.

வேறு விவரங்கள்

கட்டுப்பட்ட அனுமனை உடனே ராவணனிடத்திற்குக் கொண்டு போனதாகவும், அங்கே இந்திரஜித்து, 'நமது சேனைகளையும் சேனுபதிகளையும் கொன்று அசோக வனத்தை அழித்த குரங்கைப் பாருங்கள்' என்று ராவணனுக்கும், மந்திரிகளுக்கும் காட்டியதாகவும் வால்மீகம் கூறியிருக்க, கம்பன் அனுமனைக் கொண்டு போகும் வழியில் நடந்ததையெல்லாம் பல பாடல்களில் விவரமாய்க் கூறுகிறன்.

ராவண சபையில் இந்திரஜித்து அனுமனை அறிமுகப் படுத்துவதற்கு முந்திய நிகழ்ச்சிகள் அறுபத்தாறு பாடல்களில் கூறப்படுவதாக இப்போது வழங்கும் கம்பராமாயணப் பதிப்புகளிலிருந்து தெரிய வருகிறது.

கட்டுப்பட்ட அனுமனைக் கண்ணுரக் காணும் இலங்கை வாசிகளின் மனநிலை எப்படியெல்லாம் இருந்திருக்க வேண்டும்! எவ்வளவு கோபம், எவ்வளவு ஆத்திரம், எவ்வளவு மனக் கசப்பு, எத்தகைய பழிவாங்கும் உணர்ச்சி, எவ்வளவு துக்கம், எவ்வளவு பயம் அவர்கள் உள்ளத்திலே இடம்பெற்றிருக்க வேண்டும்!

கிங்கரர்களையும் சம்புமாலியையும் பஞ்ச சேனபதிகளையும் அட்சகுமாரனையும் பலி கொண்ட சத்துருவைக் கட்டுண்ட நிலையில் பார்க்கவே அவர்களுக்குத் தான் என்ன பெரு மகிழ்ச்சி! உணர்ச்சிகள் அவர்களை என்ன பாடுபடுத்தியிருக்க வேண்டும்! இவற்றை யெல்லாம் காட்சி காட்சியாகக் காட்டி வருகிறன் கம்பன் பல பாடல்களில்.

இடையே, தன்னல் சிதைக்கப்பட்ட மாடமாளிகைகளை அனுமன் பார்த்துக் கொண்டே வீதி வழியாகச் செல்வதையும் காண்கிறேம். தம் தம் மாளிகையிலிருந்து அரக்கரும் அரக்கியரும் வேடிக்கை பார்ப்பதையும், தேவ ஸ்திரீகள் நாககன்னிகைகள் வித்யாதர ஸ்திரீகள் முதலானவர்கள் காண வந்து கூடுவதையும், அந்த இலங்கையிலும் அரக்கர் ஒழிந்த பிறர் அனுமனது நிலை கண்டு கண்ணீர் பெருக்குவதையும் காட்சிகளாய்க் காண்கிறேம்.

திடீரென்று அனுமனுடைய கருத்துலகிற்குள்ளே பிரவேசித்து அவன் போட்டுக் கொண்டிருக்கும் செயல்-திட்டத்தையும் கண்டு கொள்கிறேம். அனுமனை இந்திரஜித்து ராவணன் அரண்மனை கொண்டு சென்றதுமே, தூதர்கள் ஓடி வானரம் கட்டுண்ட செய்தியை ராவணனுக்குத் தெரிவிப்பதையும், அவன் அவர்களுக்குப் பரிசளிப்பதையும், 'குரங்கைக் கொல்லாது கொண்டு வாருங்கள்!' என்று பெருமகிழ்ச்சிக்கிடையே கவலைப்படுவதையும் ஆச்சரியமாய்ப் பார்க்கிறேம்.

அனுமன் பிடிபட்ட செய்தி சீதை காதிலும் போய் விழுகிறதாம். அப்போது சீதையுள்ளம் என்ன பாடுபட்டிருக்கும்! அவள் பல கூறிப் புலம்பி மூர்ச்சிப்பதையும், அருகே செய்தி சொன்ன திரிஜடை இருப்பதையும் காண்கிறேம்.

அரண்மனையில் ராவணேசுவரன் அரசு வீற்றிருப்பது பதினேழு பாடல்களால் வருணிக்கப் படுகிறது. வெளிக்கு ஒரே பகட்டும் ஆடம்பரமும் அதிகார வைபவமும் கோபாவேசமும் செல்வச் செருக்கும் ஆணவப் பெருஞ்செருக்குமாயிருக்கும் தோரணையைக் கண்டு பிரமிக்கிறேம். திக்குக்களை யெல்லாம் நடுங்கச் செய்யும் சர்வாதிகார மாட்சி உச்ச நிலையில் இருப்பதையும் காண்கிறேம். தீய சிந்தனை உள்ளுக்குள்ளே அரித்து அந்த மாட்சியின் அடிப்படையையே குலைத்திருப்பதையும் காண்கிறேம்.

இத்தகைய ராவணேசுவரனைக் கண்ட அளவிலே அனுமனுக்கு ஏற்படுகின்ற ஆத்திர உணர்ச்சியையும், 'அது தகுதியன்று' என்று அனுமன் தன்னைத் தானே அடக்கிக் கொள்வதையும் தெரிந்து கொள்கிறேம். இந்த நிலையில்தான் இந்திரஜித்து அனுமனை அறிமுகப் படுத்துகிறன் ராவணனுக்கு. எப்படி? 'இவன் வீரன்; இவனே வீரன்!' என்றுதான் அறிமுகப்படுத்தப் போகிறன்.

ஆனல் நாம் பல வேறு கம்ப நாடகக் காட்சிகளைப் பார்த்தல்லவா இங்கு வரவேண்டும்?

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

52. பயத்தின் 'எவரெஸ்ட்'

கட்டுப்பட்ட அநுமனைக் கண்ட மகிழ்ச்சி என்ன பாடு படுத்துகிறது அரக்கர்களை இப்போது! மகிழ்ச்சியோடு பெருங் கோபமும் ரௌத்திராகாரமாய்க் கூத்தாடுகிறது. இந்த நிலையிலும் பயம் முற்றும் விட்ட பாடில்லை.

கோபாவேசமும் பயப் பிராந்தியும்

'அம்பால் எய்யுங்கள்' என்று கத்துகிறான் ஒருவன். அவ்வளவு கருணை காட்டவும் இஷ்டப்படாதவன், 'ரம்பம் கொண்டு இழுத்து அறுத்துத் தள்ளுங்கள் ஆசாமியை!' என்கிறான்.

'அவ்வளவு சமீபத்தில் போகவேண்டாம்' என்று நினைத்த ஒரு புத்திசாலி, 'கல்லை எறியுங்கள்; ஈட்டியை எறிந்து குத்தித் தள்ளுங்கள்' என்கிறான். 'கோடாலி போட்டுப் பிளந்து தள்ளுங்களடா!' என்று கூச்சலிடுகிறான் ஒருவன். 'குடலைக் கொய்து விடுங்கள், கூறுகூறாக!' என்று கோபிக்கிறான் ஒருவன்.

'தரையில் தேய்த்து விடுங்கள், மூட்டைப் பூச்சியைத் தேய்ப்பது போல!' என்று கொதித்துக் குமுறுகிறான் ஒருவன். அட்சகுமாரன் தேய்க்கப்பட்டதை நினைவூட்டிக் கொண்டு தான் இப்படி இரைச்சல் போடுகிறான். 'அப்படித் தசையை வீணாக்கி விட வேண்டாம்!' எனக் கருதுவது போன்ற சிக்கனப் பேர்வழி, 'தின்னுங்கள், – தின்று விடுங்கள்!' என்று கர்ஜிக்கிறான்.

'குரங்கு பிடிபட்டதே!' என்றதும் இலங்கை படும் பாடு இது:

'எய்யுமின்! ஈருமின்!
எறிமின்! போழுமின்!
கொய்யுமின், குடரினைக்
கூறு கூறுகள்
செய்யுமின்! உலகிடைத்
தேய்மின்! தின்னுமின்!
உய்யுமேல் இல்லைநம்
உயிர்!' என்(று) ஓடுவார்.

[ஈருமின் – இழுத்து அறுத்துத் தள்ளுங்கள். போழுமின் - பிளவுங்கள். உலகிடை – தரையில். உய்யுமேல் – பிழைக்குமானால்.]

இத்தனை அரக்கர்களும் இத்தனை உத்தரவுகளையும் பிறருக்குத் தான் போடுகிறார்கள்; தாங்கள் அநுமனை நெருங்கவும் துணியவில்லை.

'தூரத்தில் நின்று கொண்டிருக்கவும் துணிவில்லாமல் ஒரே ஓட்டமாய் ஓடுவதை அதோ பாருங்கள்!' என்று காட்டுவது போல்.

'உய்யுமேல் இல்லைநம்
உயிர்' என்(று) ஓடுவார்

என்கிறான் கவிஞன். ஐயோ, எவ்வளவு அநுபவத்திற்குப் பின் இந்தப் பாடம்!


கோபத்தில் மறைந்த பயம்

கட்டுப்பட்ட அநுமன் அப்படியே போய்க் கொண்டு தானிருக்கிறான். ஒரு பக்கத்திலே ஆணும் பெண்ணுமாய் ஒரு கூட்டம் வருகிறது. அநுமனைக் கண்டதும் படமெடுத்த பாம்பைப் போலச் சீறிக் கொண்டு வருகிறார்கள், 'இந்தக் குரங்குப் பயலை இத்தனை பொழுது வைத்துப் பார்ப்பதா?' என்று.

கோபத்தால் பயத்தையும் மறந்து கொலை செய்யவும் நெருங்குகிறார்களாம்:

மைத்நடங் கண்ணியர்
மைந்தர் யாவரும்
பைத்தலை அரவெனக்
கனன்று, 'பைதலை
இத்தனை பொழுது கொண்
டிருப்ப தோ?' என,
மொய்த்தனர் கொலைசெய
முயல்கின் றார்சிலர்.

[மைந்தர் - ஆடவர். பை - படம். பைதல் - பயல்.]



ஆனால் எப்படிக் கொல்லலாம் என்றுதான் தெரியவில்லை. 'நஞ்சு தடவிய ஆயுதங்களாலும் கொல்ல முடியாதே!' என்ற ஞாபகமும் வருகிறது. செல்லாக் கோபம் பொல்லாக் கோபமாய்ப் பொங்குகிறது, சமுத்திரம் பொங்கி வருவது போல.

இவ்வளவு வயிற்றெரிச்சலில் நிறைவேற்ற முடியாத தண்டனைகளை விதிக்கிறார்கள் பாருங்கள்:

'நச்சடை படைகளால்
நலியும் ஈட்டதோ?
வச்சிர உடல்மறி
கடலின் வாய்மடுத்(து)
உச்சியின் அழுத்துமின்,
உருத்(து); அ(து) இன்றெனின்
கிச்சிடை இடும்எனக்
கிளக்கின் றார்சிலர்.

[நச்சடை — நஞ்சு அடை — நஞ்சு தடவிய. படைகளால்—ஆயுதங்களால். நலியும் ஈட்டதோ — ஹிம்ஸித்துக் கொல்லப்படத் தக்கதோ. வச்சிர உடல் — இந்த வச்சிர தேகத்தை. மறி கடலின் வாய் மடுத்து — அலை மடங்கி விழும் கடலிலே போட்டு. உச்சியின் அழுத்துமின் உருத்து — உக்கிர கோப வேகத்துடன் உச்சந்தலையிலே அழுத்திக் கொண்டிருங்கள், மேலே வராதபடி. அது இன்று எனின்—அப்படிச் செய்ய வில்லையானால். கிச்சிடை யிடும்—நெருப்பில் போட்டுத் தகனம் செய்து விடுங்கள். எனக் கிளக்கின்றார்—என்று சொல்லுகிறார்கள்.]

சோகம் தூண்டிய வீரம்

இன்னும் தைரியமாக வருகிறது வேறொரு கூட்டம், அனுமனுக்குக் குறுக்கே வந்து விழுகிறது. நெருங்கிய உறவினர்களைப் போரில் பறிகொடுத்த இவர்கள் சொல்வதையும் கேளுங்கள் :

'எந்தையை, எம்பியை,
எம்மு னோர்களைத்

தந்தனை போகெ'னத்
தடுக்கின் றார்பலர்.

(எம்பியை – என் தம்பியை. எம்முனோர் – எமது தமையன்மார். தந்தனை - தந்து.)

கட்டுப்பட்ட அனுமன் இந்தத் தடைகளையும் கடந்து போகிறான். இராக்கத மகளிர் பலர் அழுகையும் அடிப்புமாய் ஒரே கோஷமாய்க் காணப்பட்டார்கள். உயிர் போன்ற அன்புக் கணவர்களைப் பறிகொடுத்தவர்கள். ஒவ்வொரு புருஷனும் ஒரு புருஷ மலைதான், புருஷ மேரு என்றே இழந்த காதலிகளின் நினைப்பு.

'இதுவரையிலும் பிரிந்திராத கணவரையும் பிரித்து விட்டானே இன்று இந்தப் படுபாவி !' என்று நோக்குகிறார்களாம் அனுமனை. நோக்கியதும் அழுகையோடு ஏக்கமும் நின்று விடுகிறது பளிச்சென்று. எப்படி இந்தப் புதிய சங்கற்பம்?

'ஓங்கலம் பெருவலி
உயிரின் அன்பரை

நீங்கலம்: இன்றொடு
நீங்கி னும்;இனி

ஏங்கலம், இவன்சிரத்(து)
இருந்த லால்திரு



வாங்கலம்!' என்றழும்
மாத ரார்பலர்.

[ஓங்கல் அம்பெருவலி-மலைபோன்ற மிக்க வலிமையுள்ள. உயிரின் அன்பரை —எங்கள் உயிர் போன்ற கணவரை. நீங்கலம் – இதுவரையிலும் நீங்கினோமில்லை. நீங்கினும்–நீங்கினோம். இனி ஏங்கலம் – இனி ஏங்கிக் கிடவாமல். இவன் சிரத்து இருந்தலால் திரு வாங்கலம் – இவன் தலைமேல் ஏறியிருந்தே தாலி யறுப்போம்.]

சோகம் ராட்சஸக் கறுவு கொண்டு அவமதித்துப் பழிவாங்கத் துடிக்கிறது, இங்கே. இந்த அரக்கியரையும் அனுமன் லட்சியம் செய்ய வில்லை. பிரமாஸ்திர – நாகபாசத்தைப் பற்றித் தன்னை இழுத்துக் கொண்டு போகிறவர்களின் வசமாகவே போய்க் கொண்டிருக்கிறான்.

அனுமனைக் கட்டி இழுத்து வருகிற செய்தி பரவி விட்டதால், வேடிக்கை பார்க்க அந்த நகரம் அப்படியே திரண்டு எதிர் வருவது போல வருகிறது ஒரு பெருங்கூட்டம். வெற்றி-ஆரவாரங்கள் விண்ணிலும் முட்டிப் பரவுவது போல் கோஷிக்கின்றன.

சோகம் தூண்டிய உவகை

இந்த ஆரவாரங்கள் செவியில் விழுந்ததும், கணவரைப் பறி கொடுத்து ஏங்கிக் கொண்டிருந்த அந்த அரக்க மகளிருக்கும் மகிழ்ச்சி பிறந்து விடுகிறதாம். அவர்களும் துயரம் ஒழிந்து ஜய கோஷங்களில் கலந்து கொள்கிறார்கள் என்பது குறிப்பு :

கொண்டனர் எதிர்செலும்
கொற்ற மாநகர்,

அண்டமுற் றது,நெடி(து)
ஆர்க்கும் ஆர்ப்பது,

கண்டமுற்(று) உலந்ததம்
கணவர்க்(கு) ஏங்கிய

குண்டல முகத்தியர்
ஓகை கூரவே.

[கொண்டனர் – அனுமனை இழுத்துக் கொண்டு போகும் அரக்கர்களுக்கு, செலும் – செல்லும்; வேடிக்கை பார்க்க வருகிற. கொற்ற மாநகர் – வெற்றியையுடைய அந்தப் பெரிய லங்காபுரி ; அதாவது அந்த இலங்கையிலுள்ள ராட்சஸக் கூட்டங்கள். அண்டம் உற்றது – ஆகாயம் அளாவிற்று. நெடிது ஆர்க்கும் – மிகுதியாக ஆரவாரம் செய்கிற. ஆர்ப்பு அது – அந்த ஆரவாரம். கண்டம் உற்று உலந்த – அனுமனால்

துண்டுபட்டு அழிந்த. குண்டல முகத்தியர் – குண்டலம் என்னும் காதணி விளங்கும் அரக்க மகளிர். ஓகை கூர – மகிழ்ச்சி அதிகரிக்கும்படி.]

அலட்சியம் விளைத்த அச்சம்

வேடிக்கை பார்க்கிறவர்களையும் லட்சியம் செய்யவில்லை அனுமன். ஜய கோஷம் செய்கிறவர்களையும் கோபிக்கிறவர்களையும் கவனிக்கவில்லை. பழி வாங்க விரும்புவோரையும் லட்சியம் செய்யவில்லை.

வீதி வழியாகச் செல்லும்போது, மலை போன்ற சில அலங்கார மாளிகைகள் இடி விழுந்து அலங்கோலமாய்ச் சிதைந்தும் பொடிபட்டும் கிடப்பது போலத் தோற்றமளிப்பதைத் தான் பார்த்துக் கொண்டே போகிறான்.

இடியா விழுந்தது?— இவனது கைத்திறன் தானே? இவற்றையும் அலட்சியமாகத்தான் பார்த்துப் போகிறான்:

வடியுடைக் கனற்படை
வயவர் மால்கரி
கொடியுடைத் தேர்பரி
கொண்டு வீசலின்,
இடிபடச் சிதைந்தமால்
வரையின் இல்லெலாம்
பொடிபடக் கிடந்தன
கண்டு போயினான்.

[வடியுடைக் கனற்படை – கூர்மையுள்ள, நெருப்புப் போலக் கொடிய, ஆயுதங்கள். படை வயவர் – அத்தகைய ஆயுதங்களைத் தரித்த வீரர்களின். மால் கரி – பெரிய யானைகளையும். கொடியுடைத்தேர் – கொடி கட்டிய தேர்களையும். பரி – குதிரைகளையும். இடிபட–இடி விழ. மால் வரையின் – பெரிய மலைகள் போல: இல்லெலாம் – அந்தச் சில வீடுகளை யெல்லாம்.]

முசிறு என்ற ஒருவகைச் செந்நிற எறும்பு பார்த்திருக்கிறீர்களல்லவா? இந்த எறும்புகள் சில மரங்களின் மேலேறிச் சூழ்வதும் சஞ்சரிப்பதுமாக மொய்த்துக் கொண்டிருக்கும். ஏதோ ஒரு செங்கயிறு கிடப்பது போல,— கடித்தால் தாங்க முடியாத வலி. அந்த மாதிரி நாகபாசமும் கயிறுகளும் அனுமனுடைய தோள்கள்மீது காணப்படுகின்றனவாம்.

அரக்கர்கள் கட்டி இழுத்துப் போகும்போது, வெள்ளைக் குரங்காகிய அனுமனின் தோளிலே கசியும் இரத்தத்தில் தோய்ந்த அக் கயிறுகள் மேலுங் கீழுமாக அசைகின்றன. அந்த அசைவைப் பார்த்தே சில அரக்க மாதர்கள் பயந்து போகிறார்களாம், குரங்கு திமிறி விடுமோ என்பதாக.

பயந்த அரக்கியர், வயிற்றில் அடித்துக் கொண்டு ஓடுகிறார்கள், அனுமனை மேல் நோக்காகப் பாரத்து விட்டு. இது கண்ட அரக்கர்களும் மயங்கி நிற்கிறார்களாம் கோரப் பல்லும் வாயுமாக — 'நகரத்திற்குள்ளும் வந்து விட்டதே குரங்கு; இன்னும் என்னென்ன செய்யுமோ!' என்றெல்லாம்.

இந்த நகரத்தின் ஒரு புறத்திலே இப்படி ஒரு குழப்பம் நடந்து கொண்டிருப்பதை இதோ பாருங்கள்:

முயி(று) அலைத்(து) எழுமுது
மரத்தின் மொய்ம்புதோள்
கயி(று) அலைப் புண்டது
கண்டு காண்கிலா(து)
எயி(று)அலைத்(து) எழும்இதழ்
அரக்கர் ஏழையர்
வயி(று)அலைத்(து) இரியலின்,
மயங்கி னார்பலர்.

[முயிறு அலைத்து எழும் முது மரத்தின் – முசிறு என்ற செவ்வெறும்புகள் அசைந்து மேலேறி மொய்த்துக் கொண்டிருக்கும் பழைய பெரிய மரம் போல. மொய்ம்பு–வலிமை. எயிறு – கோரப் பற்களை. ஏழையர் – மடமைக் குணமுள்ள அரக்க மாதர்கள். இரியலின் – நிலைகெட்டு ஓடுவதால்.]

பார்க்கப் பார்க்கப் பயம்!

இவ்வளவு மயக்கமும் பயப் பிராந்தியும் இந்தக் கவிச் சித்திரத்திலே பார்க்கப் பார்க்க அதிசயமாகவே காண்கிறது:

ஆர்ப்புற அஞ்சினர்
அடங்கி னார்பலர்;
போர்ப்புறச் செயலினைப்
புகல்கின் றார்பலர்,
பார்ப்புறப் பார்ப்புறப்
பயத்தி னல்பதைத்(து)
ஊர்ப்புறத்(து) இரியலுற்(று)
ஓடு வார்பலர்.

[ஆர்ப்பு உற–ஆர்வாரம் செய்வதற்கும். இரியலுற்று– நிலைகெட்டுச் சிதறி.]

இவர்கள் இந்த 'எவரஸ்ட்' மீது விமானத்தில் பறக்கவில்லை. துணிந்து தொத்தி ஏறினவர்களுமல்ல. தங்களை அறியாமலே பய – சிகரத்தில் செலுத்தப் பட்டவர்களே!

சுந்தர ராமாயணம்



53 'முகமும் தூது சொல்லுமே!'

'அந்தப் பொல்லாத வானரத்தை அடித்துப் பிடித்துக் கட்டி யிழுத்துக் கொண்டு வருவதெல்லாம் உண்மை தானப்பா! என் கண்ணையே நான் நம்ப முடிய வில்லையே!'

'உன் கண்கள் இப்படியே தான் பார்க்கக் கூடுமானல், உன்னையும் என்னுல் நம்ப முடியாது போ; நன்ருய்க் கவனித்துப் பாரப்பா.'

'கவனித்துத் தான் பார்க்கிறேன். விஷக் கனல் வீசுகிற உக்கிரமான பாம்பல்லவா கட்டியிருக்கிறது?'

'நாக பாச பந்தத்தைக் கவனித்தது போதும்; அந்தக் குரங்கின் முகத்தை உற்று நோக்கி உண்மை காண்பாய்!'

'ஓஹோ, முகம் எப்படிப் பொலிகிறதப்பா! என்ன களை!'

'சொல்லு; இப்போது: நாக பாசம் போட்டுக் கட்டி இழுத்து வருவது போலவா தோன்றுகிறது?'

'இல்லை. இல்லை; முகத்தைப் பார்த்தால் பூமாலை போட்டு அழைத்து வருவது போலத்தான் தோன்றுகிறது! துரதிர்ஷ்டத்தால் பூமாலையும் பாம்பாகும் என்பர்; அந்த வீரனுக்கோ பாம்பும் பூமாலை தானே?'

இப்படி ஒரு புறம் ஒரு சம்பாஷணை சில அரக்கர்களிடையே நடப்பதாய்க் கருதலாம்.

காந்துறு கதழ்எயிற் –
றரவின் கட்டு, ஒ(ரு)

பூந்துணர் சேர்த்தெனப்
பொலியும் வாள்முகம்

[காந்துறு – (இங்கே) விஷக் கனல் ஜொலிக்கிற. கதழ் எயிறு – உக்கிரமான பற்கள். எயிற்றரவின் – எயிறு அரவின்; பற்களையுடைய பாம்பின். அரவின் கட்டு – நாக பாசபந்தம். பூந்துணர் – பூமாலை. சேர்த்தென – சேர்த்தது போலாக. பொலியும் வாள்முகம் – முகம் ஒளியுடன் விளங்குகிறது.]

என்று புத்திசாலிகளான சில அரக்கர்கள் நுட்பமாய்க் கண்டு பிடிக்கிறுர்கள்.

அரக்கரும் பக்தி செய்வர்!

ஆலோசனைத் திறன் வாய்ந்த இச் சிலர், பலர் போடும் கூச்சலையும் பழி வாங்கத் துடிக்கும் துடிப்பையும் ஒப்புக் கொள்ளவில்லை. 'நன்ருக ஆலோசித்து நன்மை உண்டாகும் வழியை உணர்ந்து அதற்கு ஏற்பச் செய்யுங்கள்' என்று புத்தி சொல்லுகிறுர்கள், 'ஆத்திரமாக இந்த ஆசாமியை அரசனிடம் கொண்டு போவது பழுது' என்கிறுர்கள்.

இதைக் கேட்ட சில 'பிரகஸ்பதி'கள், எதிரே வந்து அனுமனைத் தொழுகிறுர்களாம்:

ஆம்; தொழுகை நடத்துகிறுர்கள். தேங்காய் பழம் சூடன் சாம்பிராணி கொண்டு, எனக் கருதலாம். 'மடச் சாம்பிராணிகள்' என்று இவர்களைக் கருதுவோர் கருதலாம்; ஆனல் தங்களைக் காட்டிலும் புத்திசாலிகள் இருக்க முடியாது என்றே இவர்கள் கருதி யிருக்கக் கூடு மல்லவா?

இந்த வினோத பக்தியை விளக்கிக் கொள்ள ஓர் இந்திய சரித்திர நிகழ்ச்சியை நினைவூட்டிக் கொள்ளலாம்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் துரை இந்தியாவைப் பாழாக்கி விட்டானென்றும், இந்தியர் உரிமைகளைக் காலின் கீழ் இட்டு மிதித்துத் துவைத்து விட்டானென்றும் பர்க்கு துரை ஆங்கிலச் சிமையில் வாதாடினார். ஆனால் காசிமா நகரில் சிலர் ஹேஸ்டிங்ஸ் துரையின் சிலைக்குப் பூஜை புரிந்தார்கள் என்ற செய்தியை ஹேஸ்டிங்ஸ் கட்சியினர் தெரிவித்தார்கள்.

அதற்கு பர்க்கு உடனே பதில் சொன்னார்: 'இந்துக்கள் அன்பால் சில தெய்வங்களைத் தொழுவது போல் பயத்தால் துஷ்ட தேவதைகளையும் தொழுவதுண்டு' என்பதாக.

அரக்கர்களுடைய பயபக்தியை இன்னும் சற்றுக் கூர்ந்து பார்ப்போம். அவர்கள் செய்து கொள்ளும் பிரார்த்தனையும் நம் காதில் தெளிவாக வந்து விழுகிறது :

'களிவரு சிந்தையால்
காண்டி; நங்களைச்
சுளிகிலை யாம்!' எனத்
தொழுகின் றார்சிலர்.

[களிவரு சிந்தையால் - உன்னுடைய இந்தச் சந்தோஷ மனசோடு. காண்டி – பார்ப்பாய். நங்களை–எங்களை. சுளிகிலையாம்–முகம் சுளித்துக் கோபியாதே.]

'பூமாலை போட்டு அழைத்து வருவது போலப் பொலிகின்றது ஒளி முகம்!' என்ற வார்த்தையைக் கேட்ட இவர்கள் இப்போது அனுமனை நோக்கி, 'இப்படியே சந்தோஷ மனசோடு எங்களைக் கடாட்சிக்க வேணும் சாமி! கோபித்துக் கொள்ளாதே; அந்த முகத்தைச் சுளித்து விடாதே!' என்று முன்னே போய்த் தூபதீபம் கொடுத்துத் தண்டனிட்டுத் தொழுகிறார்களாம்.

அரக்கரும் அல்லாதாரும்

எத்தனை ஸ்திரீ புருஷர்கள் கும்பல் கும்பலாய் மாளிகைகளின் நிலா முற்றங்களிலும், மேல் நிலைகளிலும், பலகணிகளிலும், வாசல்கள் தோறும் மொய்த்து ஆரவாரஞ் செய்து கொண்டிருக்கிறார்கள் :

அரமியத் தலந்தொறும்.
அம்பொன் மாளிகைத்
தரமுறு நிலைதொறும்,
சாள ரந்தொறும்,

முரசெறி கடைதொறும்
இரைத்து மொய்த்தனர்,

நிரைவளை மகளிரும்
நிரைந்த மைந்தரும்


[அரமியத் தலம்-நிலா முற்றம். தரம் உறு-மேன்மை பொருந்திய. முரசு எறி-முரசுகள் முழங்குகிற. கடை தொறும் - வாசல்கள் தோறும். இரைத்து-இரைச்சல் போட்டுக் கொண்டு. நிரை வளை மகளிரும்-வரிசையாக வளைகளை அடுக்கி அணிந்து கொண்டிருக்கும் அரக்க மகளிரும். நிரைந்த மைந்தரும் – வரிசை வரிசையாக வந்து திரண்டு நின்று வேடிக்கை பார்க்கும் அரக்கர்களும்.]

அசோக வனத்துடன் அரக்க வீரர்களையும் அழித்த குரங்கைக் கட்டியிழுத்துக்கொண்டு போகும் அந்தக் காட்சியைப் பார்க்க, அரக்கர் பேரில் அடிமைத் தொழில்கள் செய்து கொண்



டிருக்கிற தேவஸ்திரீகளும் வித்தியாதர ஸ்திரீகளும் நாக கன்னிகைகளும் சித்த கன்னிகைகளும் யட்ச ஸ்திரீகளும் வந்து கூடுகிறார்கள் :

அரம்பையர், விஞ்சைநாட்–
டளக வல்லியர்,
நரம்பினும் இனியசொல்
நாக நாடியர்,
கரும்பியல் சித்தியர்,
இயக்கர் கன்னியர்,



வரம்பறு சும்மையர்
தலைமை யங்கினர்.

[அரம்பையர் – தெய்வப் பெண்கள். விஞ்சை நாடு – வித்தியாதர லோகம். அளக வல்லியர் – கூந்தலையுடைய, கொடி போன்ற, பெண்கள். நரம்பினும் – யாழ் நரம்பின் இசையைக் காட்டிலும். நாக நாடியர் – நாகலோகத்துப் பெண்கள். கரும்பு இயல் சித்தியர் – கரும்பு போல் இனிமை வாய்ந்த; சித்த

கன்னிகைகள். இயக்கர் கன்னியர்-யட்ச கன்னிகைகள். வரம்பு அறு சும்மையர்—அளவற்ற இரைச்சலுடையவர்களாய் தலை மயங்கினர்- பல இடங்களிலும் வந்து கூடினார்கள்.]

இலங்கையில் அரக்கர்களோடு, தேவர் வித்தியாதரர் நாகர் சித்தர் யட்சர் முதலான பல்வேறு வகுப்பினர் காணப்பட்ட போதிலும், இலங்கை வாசிகளை 'அரக்கர்' என்றும் 'அரக்கர் அல்லாதார்' என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துப் பேசுகிறான் கவிஞன். இன்று 'வெள்ளையர், வெள்ளையரல்லாதார்' என்றெல்லாம் சௌகரியத்தை உத்தேசித்துப் பிரித்துப் பேசுகிறார்களல்லவா ?

இரண்டு பெரும் பிரிவுகளிலே அரக்கருக்கு மகிழ்ச்சி பெருக, 'அல்லாதாரு'க்குக் கண்ணீர் பெருகுகிறதாம். ராவண பயத்திற்கும் அடங்காமல் பெருகுகிற கண்ணீரல்லவா ?

இக் கண்ணீர் குறித்துக் கொஞ்சம் ஆராய்ச்சி நடக்கிறது இப் பாட்டிலே ;

அரக்கரும் அரக்கியர்
குழாமும் அல்லவர்
கரக்கிலர் நெடுமழைக்
கண்ணி னீர் ; அது



" எதற் கெடுத்தாலும் வெளி வருகிற நான், நான் என்கிற அகந்தையை அடியோடு அழித்து விடணும் !...இதைப் பற்றி நேற்று நான் இவருக்கு விவரமாகச் சொல்லிக் கொண்டிருந்தேன் !..."

" ஓய் !...புருடா அடிக்காதேயும் !... நேற்று நான் சொல்லிக் கொண்டிருந்ததையே தான் நீங்க சொல்கிறேள் !..."

விரைக்குழல் – சீதைதன்
மெலிவு நோக்கியோ ?
இரக்கமோ ? அறத்தின(து)
எண்மை யேகொலோ ?

[கரக்கிலர் – மறைக்க (அதாவது, உள்ளடக்க) மாட்டாதவரானார்கள். நெடு மழைக் கண்ணின் நீர் – நீண்ட மழைத் தாரை போல் பெருகிய கண்ணீரை. விரைக் குழல் – நறுமணமுள்ள கூந்தலையுடைய. மெலிவு — துன்பம். எண்மையே கொலோ — எளிமையைக் கருதியதால் நேர்ந்ததோ.]

அட்ச குமாரன் வதமானதும் அரக்கியர்களும் அரக்கர்களும் அழுதார்களல்லவா ? அப்போது,

தேவரும் அழுதனர்,
களிக்கும் சிந்தையார்

என்று கவி கூறியுள்ளான். சிந்தைக்குள்ளே களிப்புற்ற தேவர்கள் அதை உள்ளடக்கிக் கொண்டார்கள், ராவண பயத்தினாலே. அத்தகைய ராவண பயத்தாலும் இப்போது இந்த அழுகையை உள்ளே அடக்கிவிட முடியவில்லையாம்.

அனுமனோ தொழுகைக்கும் அசையவில்லை ; இந்த அழுகைக்கும் அசைந்து கொடுக்க வில்லை. 'என்னால் திமிறிக் கொண்டு போக முடியாதா ?' என்ற எண்ணத்திற்கும் இடங்கொடுக்கவில்லை. தன்னை இழுத்துப் போகிறவருடைய இஷ்டத்திற்கு மாறாக ஒன்றுமே எண்ணாதவனைப்போல், அப்படியே பரம சாதுவாகப் போய்க்கொண்டிருக்கிறான்.

அனுமன் திட்டம்

எப்படியாவது ராவணனைப் பார்த்து விடுவது நல்லதுதானே என்று எண்ணம் :

ஆண் தொழில் அனுமனும்
அவரொ(டு) ஏகினான்,
மீண்டிலன், வேறிலன்,
விரும்ப லுற்றிலன்,
'ஈண்டிது வேதொடர்ந்(து)
இலங்கை வேந்தனைக்
காண்டலே நலன்'எனக்
கருத்தின் எண்ணினான்.

[ஆண் தொழில் அனுமனும் — ஆண்மைத் தொழிலாகிய வீர பராக்கிரமத்தில் சிறந்த அனுமனும். அவரொடு ஏகினான் — அவர்களோடு சென்றான். மீண்

டிலன் — திமிறிக்கொண்டு திரும்பிப் போய் விடாமலும். வேறு இலன் — அவர்கள் இழுத்த இழுப்புக்கு மாறு படாமலும். விரும்பல் உற்றிலன்—தன் விருப்பமாக வேறொன்று விரும்பாமலும். ஈண்டு இதுவே தொடர்ந்து — இப்போது போகிற இந்தப் போக்கே காரணமாக இந்த அரக்கர்களைத் தொடர்ந்து சென்று.]

எவ்வளவு சுலபமாகத் தன் தூது வெற்றி பெறக் கூடுமென்று எண்ணுகிறான் பாருங்கள்:

வளை எயிற் றரக்கனை
உற்று, மந்திரத்(து)

அளவுறு முதியரும்
அறிய, ஆணையால்

வினைவினை விளம்பினால்,
மிதிலை நாடியை

இளகினன் என்வயின்
ஈதல் ஏயுமால்.

[வளை எயிறு அரக்கனை - வளைந்த கோரப் பற்களையுடைய அரக்கர் கோனை. உற்று-அடைந்து. மந்திரத்து-அவனுடைய மந்திராலோசனை மன்றத்திலே. அளவுறு முதியரும் - சேர்ந்துள்ள, ஆண்டிலும் அறிவிலும் முதியவர்களான மந்திரிகளும். ஆணையால் வினைவினை - ராமன் ஆணையால் விளையக் கூடிய காரியத்தை. மிதிலை நாடியை - மிதிலைப் பெண்ணாகிய சீதா பிராட்டியை. இளகினன்-(இங்கே) மன உறுதி குலைந்து. என் வயின்-என்னிடம். ஈதல் ஏயும் - கொடுத்து விடக்கூடும்.]

யுத்த காண்டம் இல்லாமலே, 'இலங்கை எரியூட்டு படலம்' கூட இல்லாமல், ராமாயணத்தை முடித்துவிடப் பார்க்கிறானே அனுமன்! 'ஒருவேளை இப்படியும் நடைபெறுதா?' என்று தான் கண்ணோட்டம் கொண்ட, பண்பாடு நிறைந்த அனுமன் மனோராஜ்யம் செய்கிறான்.

எந்த விதத்திலும் ராவணனுடைய மனநிலை தெரிய வேண்டுமல்லவா? ராவணனுக்குத் துணை செய்யும் அமைச்சர்கள் சேனாபதிகள் முதலானவர்களின் எண்ணமும் எல்லையும் தெரிந்து கொள்ள வேண்டியதும் அவசியம் தானே?

"கட்டளை இடுங்கள்!"

எஸ். வைத்யநாதன்

"வா அண்ணா! வர வர உன்னைக் காணுவதே அபூர்வமாகப் போய் விட்டதே!" என்று ராமச்சந்திரனை வரவேற்றான் சாரு.

நாற்காலியில் உட்கார்ந்துகொண்டே, "காண முடியாமல் என்ன சாரு! இப்படி, வந்து கொண்டு தானே இருக்கிறேன்? என்னைக் கண்டாலே உன் அகமுடையானுக்கு வேப்பாக இருக்கும் போது நான் அடிக்கடி எப்படி வர முடியும்? உன்னை உத்தேசித்துத் தான் இங்கு வருவதை அடியோடு நிறுத்தாமலிருக்கிறேன் நான், என்பது உனக்குத் தெரியாதா?" என்றான் தமையன்.

"வாஸ்தவம் அண்ணா! அவர் இப்படி மூர்க்க குணம் வாய்ந்தவராயிருக்கிறாரே என்பதை நினைத்து நினைத்து நான் மனம் புழுங்காத விநாடியில்லை. எவ்வளவு கூறினாலும் அவர் மனத்தில் படமாட்டேன் என்கிறதே அண்ணா!" என்றாள் வேதனையினால் கம்மிய குரலுடன் சாரு.

"அதற்கு நீ என்ன பண்ண முடியும் சாரு? அவன் வந்த வழி அது!" என்று ஆறுதல் கூறி விட்டு, சற்று நேரம் உபய குசலப்ரச்னத்துக்குப் பிறகு ராமச்சந்திரன் கேட்டான்: "என் சாரு, கிருஷ்ணமூர்த்தி எங்காவது உத்தியோகத்துக்குப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருக்கிறானா? ஏதாவது கிடைக்கும் போலிருக்கிறதா?"

"பார்த்தாயா அண்ணா? அதைச் சொல்ல மறந்து போய் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறேனே!" என்று தன் மறதியை நொந்து கொண்ட சாரு கூறினாள்: "அடுத்த மாசம் புதிதாகக் கம்பெனி யொன்று ஆரம்பிக்கப் போகிறார்களாம். அதில் இவரை எடுத்துக் கொள்வதாக வாக்களித்திருக்கிறார்களாம். இருநூற்றைம்பது ரூபாய் சம்பளம் தருவதாகச் சொல்லி இருக்கிறார்களாம். ஆனால் 'டெபாஸிட்' ஆயிரம் ரூபாய் கட்டணுமாம். அது தான் இப்போது யோசனை ..."

குறுக்கிட்டுக் கேட்டான் ராமச்சந்திரன், வியப்பினால் விரிந்த புருவங்களுடன்: "எடுத்த எடுப்பிலேயே இருநூற்றைம்பது ரூபாய் சம்பளமா! அதுவும் புதிதாக ஆரம்பிக்கப் போகிற கம்பெனியிலா! யார் அப்படி இவனுக்கு உத்தியோகம் கொடுக்கப் போகும் தாராளப் பிரபு? உனக்கு அதைப் பற்றி ஏதாவது தெரியுமா?"

"சொன்னார் அண்ணா! யாரோ மார்க்கசகாயம் என்பவராம். ரொம்ப நல்ல மனிதராம். பேச்சிலேயே இனிமை சொட்டுகிறதாம். மிகவும் கண்யத்துடனும் மரியாதையுடனும் நடந்து கொள்கிறாராம். அவரைப் பற்றி இவர் அத்தியாயம் அத்தியாயமாக வர்ணிக்கிறார். இவரே அப்படிச் சொல்கிறார் என்றால்..."

"மார்க்கசகாயமா?" என்று இடைமறித்தான் அவள் அண்ணன். அவன் புருவங்கள் சுருங்கின.

"ஏன் அண்ணா, அவரை உனக்குத் தெரியுமா?"

"ரொம்ப நன்றாகத் தெரியும். மிக்க நல்ல மனிதர்......ஆமாம், டெபாஸிட் தொகைக்கு என்ன செய்யப் போகிறான் கிருஷ்ணமூர்த்தி?"

"எனக்குக் கூட உன்னைக் கேட்டு வாங்கிக் கட்டச் சொல்லலாம் என்கிற எண்ணம் உண்டு, அண்ணா! ஆனால் உன் பெயரை எடுத்தாலே அவர்தான் சீறுவாரே!...அவரே யோசனைபண்ணி வசிக்கும் அவர் வீட்டை அடமானம் வைத்தோ, அல்லது விற்று விட்டோ டெபாஸிட்டைக் கட்டி விடுவதாகத் தீர்

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

54. மூவர் அக உலகு

சொல்லின் செல்வனல்லவா? ராமன் கட்சியிலுள்ள நியாயத்தை ராவண—நெஞ்சிலும் பதிய வைத்து விடலாமென்று நம்பினான். அந்த நெஞ்சு நீதிக்கு இடம் தரவில்லையென்றால் ராமனுடைய வல்லமையையாவது பதிய வைத்துச் சீதையை மீட்டுக் கொள்ளலாமே என்று துணிந்தான்.

மனோ ராஜ்யத்திலே அனுமன்

ராம பராக்கிரமம் என்றால் சாமானியமா? லோக பயங்கரனான ராவணனுக்கும் பயங்கரனாக இருந்த வாலிக்கும் இறுதி விளைவித்தது சாதாரண வீரச் செயலாகுமா? ஏழு மராமரங்களை ஏக காலத்தில் ஒருங்கு தொளைபட ஒரே அம்பு எய்தது தான் சாதாரண புஜ பலமா? வாலியைக் கொல்லும் வல்லமை ராமனுக்கு உண்டோ என்ற ஐயம் தீர்த்துச் சுக்கிரீவனைத் தெளிவித்த சோதனை வெற்றியல்லவா?

இத்தகைய வல்லவனுக்கு வேறு துணையும் வேண்டுமோ? எனினும் வானரப் பெருஞ் சேனைக்கு அளவுண்டா? சுக்கிரீவ மகாராஜாவின் வலிமை தான் கொஞ்சமா? இப்படியெல்லாம் வாக்கு வசீகரமாய் எடுத்துக் காட்டி ராவணனுடைய நெஞ்சிலே ராம வீரத்தை நிலை நிறுத்துவோம் எனக் கருதுகிறான் அனுமன்.

இந்த வாக்கு வன்மைக்கு அஞ்சிப் பிராட்டியை ராவணன் விட்டு விடுவதும் நடக்கக் கூடியது தான் என்று எதிர்பார்க்கிறது அனுமனுள்ளம்:

> வாலிதன் இறுதியும்,
> மரத்துக்(கு) உற்றதும்
> கூலவெஞ் சேனையின்
> குணிப்பிலாமையும்,
> மேலவன் காதலன்
> வலியும், மெய்ம்மையால்
> நீல்நிறத்(து) இராவணன்
> நெஞ்சில் நிற்குமால்.

[கூலவெஞ்சேனையின் – நீண்ட வாலுள்ள கொடிய குரங்குச் சேனையின். குணிப்பு இலாமையும் – அளவில்லாமையும். மேலவன் காதலன் – சூரிய புத்திரனாகிய சுக்கிரீவனது. மெய்ம்மையால் – உள்ளபடியே.]


சீதையை விட வில்லையென்றால், இன்னுமுள்ள ராட்சஸ சேனையிலும் பாதிக்கு மேலாக அழித்து விட்டுத் திரும்புவதற்கும் அவகாசம் இருப்பதாய்க் கருதுகிறான். 'மனோராஜ்யத்திலும் அர்த்த ராஜ்யமா?' என்று கூறுவதுண்டு. அனுமனுடைய மனோ ராஜ்யம் முழு ராஜ்யம் தான்!

இதோ பாருங்கள், மனோராஜ்யத்திலே தன்னை முழுக்க இழந்து ஒரு யந்திர வடிவம் இழுக்கப்படுவது போல் இழுத்துக் கொண்டு போகப்படும் அனுமனை:

> 'ஆதலான் அரக்கனை
> எய்தி, ஆற்றலும்
> நீதியும் மனக்கொள
> நிறுவி, நின்றவும்

பாதியின் மேல்செல
நூறிப் பைப்
பையப்
போதலே கருமம்'
என்(று)
அனுமன் போயி
னன்.

[மனக்கொள நிறுவி – அவன் மனத்திற் கொள்ளும்படி நிலை நிறுத்தி. நின்றவும் – இதுவரை என்னால் அழிந்தது போக மிச்சமாயுள்ள சேனைகளையும். பாதியின் மேல்செல – பாதிக்கு மேலாக. நூறி – அழித்து விட்டு. பைப் பைய-பையப் பைய; கொஞ்சங் கொஞ்சமாக.]



ஒரு முரட்டுக் காளைமாட்டைக் கட்டிக் கொண்டு போவது போலக் கொண்டு போகிறான் இந்திரஜித்து அனுமனை ராவணன் மாளிகைக்கு:

கடவுளர்க்(கு) அரசனைக்
கடந்த தோன்றலும்,
புடைவரும் பெரும்படைப்
புணரி போர்த்தெழ,
இடைபிணிப் புண்டது
போலும் விரனைக்
குடைகெழு மன்னன் இல்
கொண்டு போயினன்.

[கடவுளர்க்கு அரசனை – தேவராஜாவை. கடந்த – வென்ற. தோன்றலும் – வீரனை இந்திரஜித்தும். புடைவரும் – பக்கங்களில் வருகிற. பெரும் படைப் புணரி – பெருஞ்சேனையாகிய கடல். போர்த்து – சூழ்ந்து. இடை – ரிஷபம்; காளை மாடு. பிணிப்புண்டது போலும்-கட்டப்பட்டது போலுள்ள. குடைகெழு மன்னன்இல் – கொற்ற வெண்குடையோடு கூடி விளங்கும் அரக்கர்கோனுடைய அரண்மனைக்கு.]

பரிசளிப்பு

இதற்குள் தூதர்கள் ஓடிப் போய் ராவணனுக்குச் செய்தி சொல்லி விடுகிறார்கள். 'உம்முடைய வீரப் புதல்வனுடைய அஸ்திரம் தான் அந்தக் குரங்கைக் கட்டி விட்டது' என்றும் சொன்னார்கள். பிரமாஸ்திரம் பிரயோகித்துத் தான் இந்திரஜித்தினாலும் கட்ட முடிந்தது என்று ஓரளவு விவரமாகவும் செய்தி சொல்கிறார்கள்.

ராவணன் ஆச்சரியமாகவே கேட்கிறான் அந்தச் செய்தியை. 'அப்படிச் சொல்லடா செய்தியை. சபாஷ்!' என்பதாக ஒரு மௌனப் பிரசங்கம் செய்வதுபோல் அவர்களைப் பார்த்துவிட்டுச் சம்மானம் கொடுக்கிறான். ஆம்; தான் மார்பில் அணிந்திருந்த முத்து மாலையை உடனே கழற்றி அவர்களுக்கு வெகுமானமாய்க் கொடுத்து விடுகிறான்.

இந்தப் பரிசளிப்பை அந்த உவகை நிமிர்ந்த நெஞ்சுடன் இதோ பார்க்கிறோம்:

கேட்டலும், கிளர்சுடர்
கெட்ட வானென
ஈட்டிருள் விழுங்கிய
மார்பின், யானையின்
கோட்டெதிர் பொருத,பே–
ராரம் கொண்டெதிர்
நீட்டினன், உவகையின்
நிமிர்ந்த நெஞ்சினன்.

[கேட்டலும் – தூதர் சொல்லக் கேட்டவுடனே. கிளர்சுடக் கெட்ட வான் என – விளங்குகின்ற சந்திரன் ஒழிந்த இரவின் வானம் போல. ஈட்டு



இருள் விழுங்கிய – செறிந்துள்ள இருட்டு விழுங்கிய; அதாவது மிகக் கறுத்த. மார்பின் – மார்பிலே தான் அணிந்துள்ளதும். யானையின் கோடு – திக்கஜங்களின் தந்தங்களினால். எதிர் பொருத – எதிர்த்து மோதப்பட்டது மான. பேராரம் – பெரிய முத்து மாலையை. கொண்டு–கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு. எதிர் நீட்டினன் – செய்தி சொன்ன தூதர்களுக்கு எதிரே கை நீட்டிப் பரிசாக வழங்கினான்.]



ராவணனுடைய திக்விஜய காலத்தை நினைப்பூட்டுகிறது, 'யானையின் கோடு எதிர் பொருத' என்பது. திக்கொடு திக்கின் அந்தங்களையும் வெற்றி கொண்ட ராவணன் அஷ்டதிக்கு யானைகளையும் எதிர்த்தானாம். யானைகள் கோபித்து இவனுடைய மார்பிலே தமது கூரிய தந்தங்களால் தாக்கின. தந்தங்களுக்குத்தான் சேதம்; மார்பிலே கிடந்த அந்தப் பெரிய முத்துமாலைக்குக் கூடச் சேதம் ஏற்படவில்லையாம். 'அத்தகைய அநாயாஸ வெற்றி அடைந்த மார்பு' என்பது குறிப்பு.

அந்த மார்பிலே அந்தப் போரிலும் ஊறுபடாது இன்றளவும் கிடந்த அந்தப் பெரிய முத்துமாலையை இந்தத் தூதர்களுக்குப் பரிசாக அளிக்கிறான் ராவணன். முத்துமாலை இல்லாத அந்த மார்பு இப்போது சந்திரன் இல்லாத வானம் போல் இருள் விழுங்கியதாகக் காணப்படுகிறதாம்.

ராவணேச்வரனின் பேருவகையை இந்தப் பரிசளிப்பினால் வெளியிடுவதுடன் அவன் தூதர்களை நோக்கிச் சொன்ன வார்த்தையைக் கொண்டும் வெளியிடுகிறான் கவிஞன்:

எல்லையில்
உவகையால்
இவர்ந்த
தோளினன்,

புல்லுற
மலர்ந்தகண்—
குமுதப்
பூவினன்,

'ஒல்லையின் ஒடிநீர்
உரைத்(து)என் ஆணையால்,
கொல்லலை தருகெனக்
கூறு வீர்' என்றான்.

[எல்லையில் உவகையால் – எல்லையில் லாத மகிழ்ச்சியால். இவர்ந்த – பூரித்த. புல்லுற – சுற்றிடத்தைத் தழுவுமாறு. கண் குமுதப்பூவினன் – கண்களாகிய செவ்வாம்பல் மலர்களையுடைய ராவணன். ஒல்லையின் – விரைவில். உரைத்துக் கூறுவீர் – (இந்திரஜித்திடம்) வற்புறுத்திச் சொல்வீர்.]

சீதைக்கும் எட்டுகிறது அனுமன் பிடிபட்ட செய்தி. திரிஜடை அப்பொழுதைக்கப்பொழுது நடந்த விஷயங்களைச் சுருக்கமாகச் சொல்லி வருகிறாள் சீதைக்கு. அசோக வனத்தை எப்படி முறித்தழித்தான் என்பதையும், கிங்கரர் ஆகிய எண்ணிறந்த அரக்கர்களை ஒறுத்து அழித்ததையும் ஏற்கனவே அறிவித்திருக்கிறாள்.

சீதையின் கவலை

அந்த நிகழ்ச்சிகளைக் கேட்டுச் சீதைக்கு ஒரே மகிழ்ச்சி. ஆனால் இப்போது அனுமன் பிடிபட்ட செய்தி எவ்வளவு துயரத்தை, உயிரே சோர்ந்து போகும் கவலையை, வெறுப்பைத் தருகிறது!

இந்தச் செய்தியைத் திரிஜடையும் கவலையோடு தான் தெரிவிக்கிறாள் :

'இறுத்தனன் கடிபொழில்:
எண்ணி லோர்பட
ஒறுத்தனன்' என்றுகொண்(டு)
உவக்கின் றாள்,உயிர்
வெறுத்தனள் சோர்வுற,
வீரற்(கு) உற்றதைக்
கறுத்தலில் சிந்தையாள்
கவன்று கூறினாள்.

[இறுத்தனன் – முறித்து அழித்தான். கடிபொழில் – பாதுகாவலுள்ள அசோகவனத்தை. எண்ணிலோர்பட – எண்ணிறந்த அரக்கர்கள் இறந்து போகும்படி. ஒறுத்தனன் – கொன்றொழித்து விட்டான். என்று கொண்டு – என்று அப்போதைக்கப்போது திரிஜடை சொல்லக் கேட்டுக் கொண்டு. உவக்கின்றாள் – உவக்கின்றவளான சீதை. உயிர் வெறுத்தனள் சோர்வுற – தன் உயிரையும் வெறுத்தவளாய்ச் சோர்ந்து போகும்படி. வீரற்கு – அனுமனாகிய வீரனுக்கு. கறுத்தலில் சிந்தையாள் – வஞ்சகமான மனக் கறுப்பு ஒன்றும் இல்லாத திரிஜடை. கவன்று – கவலை கொண்டவளாய்.]

அரக்கர் கையில் சிக்கி அனுமன் இழுத்துக் கொண்டு செல்லப்பட்டதைக் கண்டும் கேட்டும் அரக்கர்களும் அரக்கர் கோனும் என்ன பாடு பட்டார்கள் என்பதைப் பல பாடல்களால் காட்டி வந்த கவிஞன், இந்தச் செய்தி கேட்டுச் சீதை என்ன பாடு பட்டிருக்க வேண்டும் என்பதை ஆறு பாடல்களில் ஓர் அற்புத இசைச் சித்திரமாய்க் காட்டுகிறான்.

இந்த இசை யோவியம் எப்படி ஆரம்பமாகிறது பாருங்கள் :

ஓவி யம்புகை
உண்டது போலொளிர்
பூவின் மெல்லியல்
மேனிபொ டியுறப்

பாவி வேடன்கைப்
பார்ப்புறப் பேதுறும்
தூவி அன்னம்அன்—
னாள்,இவை சொல்லினாள்.

[ஓவியம் – சித்திரம். பூவின் – பூவையொத்த. பார்ப்பு – குஞ்சு. பேதுறும் – வருத்தப்படும். தூவி-சிறகு.]

இந்தப் பாட்டின் பொருளெல்லாம், 'வேடன் கையில் அன்னக் குஞ்சு சிக்கிக் கொண்டதால் தாய் அன்னம் என்ன பாடுபடுமோ, அந்தப் பாடு படுகிறாள் சீதை' என்பது தான். ஆனால் இந்த இசைப் பாட்டைப் பாடிப் பாடிப் பாருங்கள்: ஓதி ஓதி உணர்ந்து பாடுங்கள். சீதையின் அந்த அவஸ்தை நிலையை எப்படியோ பிரதிபலித்துக் காட்டி விடுகிறது கவிதைக் கண்ணாடி—இல்லையா ?

இந்தப் பீடிகையுடன் நாலு பாடல்கள் ஒலிப்பதிவு செய்திருக்கின்றன சீதை புலம்பலை. சீதையின் குணாதிசயத்திற்கும், பண்பாடுகளுக்கும் எவ்வளவு இசைவான புலம்பல் !

அனுமன் தனக்குக் காட்டிய விசுவரூபம் நினைவிற்கு வருகிறது. அது கண்டதுமே—அதைக் கண்டதுதான் எப்படி? கண்டதும் காணாததுமாகத்தானே இருந்தது அப் பேருருவம்? சீதையின் உவகைக்குத்தான் எல்லை உண்டோ ?

சுந்தர ராமாயணம்



55. தளர்ந்த தாயுள்ளம்

(ஒரு சிற்பத்திறன்)

அனுமனது வெற்றியாலும், அனுமன் பிடிபட்டதாலும் இலங்கை பட்ட பாடு கம்பனது கவிதைக் கண்ணாடியின் வாயிலாகக் காட்சி காட்சியாய் நம் கண் முன் வந்து கொண்டிருந்தன. ஆதி காவியத்தின் கதைப் போக்கிலே காணப்படாத இடங்களை நம் கவிஞன் எவ்வாறு கற்பனை செய்து காட்டித் தன் காவியப் பூங்கோயிலை ஒரு புதுமைப் பெருங்கோயிலாக்கி வருகிறான் என்பதையும் நாம் கண்டு வருகின்றோம்.

இத்தகைய புதுமைகளில் ஒன்று, அனுமன் பிடிபட்ட செய்தி கேட்டுச் சீதை படும் பாடு. 'ஓவியம புகையுண்டது' போலக் காணப்பட்ட சீதை அச் செய்தி கேட்டதுமே 'புகையோடு புழுதியும் ஆடியது சித்திரம்' எனத் திகைக்குமாறு புரண்டு புலம்பினாள்.

தன் அருமைக் குஞ்சு ஒரு வேடனுடைய முரட்டுக் கைகளில் சிக்கிக் கொண்டது கண்டு தாய் அன்னம் படும் பாடு பட்டாள். பூவும் அன்னமும் ஓவியமும் சீதையை உயிரோவியமாக எப்படிக் காட்டி விடுகின்றன பாருங்கள்!

இப்படிச் சீதையின் நிலையை ஒரு பாட்டில் நமக்கு உணர்த்தி விடும் கவிஞன், இவள் புலம்பலை நான்கு பாடல்களால் நம் காதில் வந்து விழச் செய்து விடுகிறான்.

'இதுவோ அறப்பான்மையே!'

தனக்கு ஊக்கம் அளிப்பதற்காக அனுமன் காட்டிய விசுவரூபம் உள்ளத்திலே ஒரு பால் தோன்ற, அவன் கட்டுப்பட்டுத் தலை குனிந்து உள்ளமும் உருவமும் குன்றி நடக்கும் நிலை வேறொருபால் தோன்றுகிறது.

அனுமனுடைய ஞான சொரூபம் தான் சாதாரணமா? அந்த ஞானமும் அனுமனது பேருள்ளத்திலே விசுவரூபம் எடுத்திருப்பதாகத் தோன்றியதல்லவா?

இப்படி ஸ்தூல சக்திக்கும் சூட்சும சக்திக்கும் நிகரற்றதொரு பேருருவமாக விளங்கிய பெரியோனும், ஒரு கள்ள அரக்கனால்—இந்திரஜித்தின் ஒரு மாய வஞ்சனையால்—கட்டுப்பட்டான் என்றால், சீதைக்கு அனுமனைப் பார்த்த பின் தருமத்திலே ஏற்பட்டிருந்த நம்பிக்கையும் தளர்ந்து போகிறது:

உற்றுண் டாய
விசும்பை உருவினாய்;
முற்றுண் டாய்;கலை
யாவையும் முற்றுறக்
கற்றுண் டாய், ஒரு
கள்ள அரக்கனால்
பற்றுண் டாய்: இது
வோ அறப் பான்மையே!

[உற்று உண்டாய-மிகப் பரந்துள்ளதான. விசும்பை-ஆகாயத்தை. உருவினாய் முற்றுண்டாய்-ஊடுருவி வளர்ந்து நிறைந்தவனும். முற்றுற-முடிய. பற்றுண்டாய்-கட்டுப்பட்டாய். பான்மை-தன்மை.]

கடல் கடந்ததும் இதற்குத் தானோ?

அனுமனுடைய ஸ்தூல சூட்சும சக்திகளுக்கு, அவன் கடல் கடந்து வந்

ததே ஒரு பெருஞ் சான்றல்லவா? கடல் கடந்தது மட்டுமா? ராட்சஸக் கடலின் நிலைக்களமாகிய பேரூரிலும் துணிந்து புகுந்த அந்த ஆற்றல் தான் சாமானியமா?

மேலும் ராட்சஸக் கடல் கலக்கி வெற்றியை நிலை நாட்டினுன் என்று கேட்கப் பெறுவதல்லவோ சீதையின் செவிக்கு இன்பமாவது, உள்ளத்திற்கு ஆறுதல் தருவது?

அப்படி யின்றி, அனுமன் தனக்கே ஆபத்து விளைவித்துக் கொண்டது குறித்துச் சீதை என்ன தான் நினைக்க முடியும், செய்ய முடியும்?

ஒரே இடர்க் கடல் சூழ்ந்து கொண்டு நாற்புறமும் பொங்கி அலைக்கைகளைக் கோத்துத் தன்னை மூழ்கடிப்பது போன்ற ஒரு பயங்கர உணர்ச்சி ஏற்படுகின்றது சீதைக்கு இப்பொழுது:

கடர்க டந்து
புகுந்தனை ; கண்டகர்
உடர்க டந்தும்நின்
ஊழி கடந்திலை ;
அடர்க டந்த
திரள் புயத்(து) ஐய, நீ
இடர்கள் தந்தனை
வந்திடர் மேலுமே !

[கடர் – கடல். கண்டகர்–உலக சமுதாயத்திற்கு முன்னைப் போல் துன்பம் செய்வோர். உடர்-உடல். நின் ஊழி கடந்திலை–உன் வாழ் நாளுக்கு ஒரு குறைவும் இல்லாதிருந்தாய். அடர் – அடல்; வலிமை. இடர்கள் தந்தனை வந்து இடர் மேலுமே-வந்து எனக்கு இடர் மேல் இடர்கள் தந்து விட்டாய்.]

அனுமன் ஆற்றிய சாகஸச் செய்கைகள் ஒரு புறம் இருக்க, உயிரை விட்டு விடச் சித்தமாயிருந்த தனக்கு அந்த உயிரை மீட்டுக் கொடுத்த மஹோபகாரம் எப்படி ஆழ்ந்து பதிந்திருக்கிறது சீதை யுள்ளத்திலே! அத்தகைய பேருதவிக்குக் கைம்மாறு உண்டோ?

இப்படிக் கருதிய சீதை, அனுமனைச் சிரஞ்சீவியாக வாழுமாறு வாழ்த்தி வரம் கொடுத்தாள் அல்லவா? அந்த வரத்தின் கதிதான் என்ன இப்போது?

வாழ்த்தும் பொய்த்ததோ ?

அனுமனுடைய மலைபோன்ற புயங்களே கட்டுப் பட்டன என்றால், என் செய்வது? அனுமன் வலிமையும் பொய்த்து, சீதை வரமும் அல்லவா பொய்த்துப் போயிற்று?

கணையாழியா காட்டினுன்? ஆழி காட்டி ஆருயிர் காட்டியதாக அன்றோ இதயம் தளிர்ந்திருந்தது?

அந்த மகா வீரனுக்கு, 'ஊழி காட்டுவென்' என்று வாழ்த்திய அந்த வாழ்த்தை நினைத்துச் சீதையின் பொன்னுன நெஞ்சம் எப்படிப் புண்ணுகின்றது பாருங்கள்!

ஆழி காட்டிஎன்
ஆருயிர் காட்டினுய்க்(கு)
'ஊழி காட்டுவென்'
என்றுரைத் தேன் ; அது
வாழி காட்டுமென்(று)
உண்(டு); உன் வரைப்புயப்
பாழி காட்டி
அரும்பழி காட்டினுய் !



[ஆழி -கணையாழி, மோதிரம்; வரைப் புயம்–மலை போன்ற தோள்கள். பாழி–வலிமை.]

அனுமன் கணையாழி காட்டிச் சீதையால் வாழ்த்தப் பெற்ற அந்தத் தனிப் பெரு நிகழ்ச்சியைச் 'சுந்தர காண்டத்தின் இதயம்' என்று கருதலாம். 'எந்த



வீரன் எந்தச் செல்வியால் இப்படி வாழ்த்தப் பெற்றிருக்கிருன் மகா காவிய உலகிலே!' என்று பிரமிக்குமாறல்லவா அமைந்திருக்கிறது அந்தக் கம்ப சித்திரம்?

அப்பொழுது சீதை வாழ்த்திய வாழ்த்தொலி இன்றும் இதய கானமாகவே ஒலித்துக் கொண்டிருக்கிறது;

'பாழிய பணைத்தோள் வீர,
துணையிலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ளலே, யான்
மறுவிலா மனத்தேன் என்னின்,
ஊழிஓர் பகலாய்
ஓதும்
யாண்டெலாம்
உலகம் ஏழும்
ஏழும்வீ வுற்ற ஞான்றும்,
இன்றென இருத்தி!' யென்
ருள்.

[பாழிய-வலிமை வாய்ந்த. பணைத்தோள் – திரண்ட தோள். பரிவு– துன்பம். மறுவிலா–குற்றமில்லாத. பகல் – நாள். யாண்டெலாம் – வருடங்கள் எல்லாம். உலகம் ஏழும் ஏழும் – பதினன்கு உலகங்களும். வீவுற்ற ஞான்றும் – அழிந்த காலத்திலும்.]

அந்த வாழ்த்தெல்லாம் எவ்வளவு விரைவில் கனவாய்ப் பழங்கதையாய்ப் போய் விட்டன! அப்பொழுது தான் எத்தனை ஆனந்தக் கனவுகள் சீதையின் உள்ளத்தில் தோன்றின!

ராம லட்சுமணர்களுடைய நிலைமையையும், தன்னைப் பிரிந்த பின் நடந்த விஷயங்களையும் எவ்வளவு ஆவலாக

அறிய விரும்பினள்! வாய் கேட்ட கேள்விகளுக்கு மேல் நெஞ்சு கேட்கத் துடித்துக் கொண்டிருந்த ஒரு பெருங் கேள்வியும் உண்டு.

ஒரு கனவு - நாடகம்

கேட்ட கேள்விகளுக்கு மட்டுமா பதில் அளித்தான்? சீதை மீது ராமனுக்குள்ள எல்லையற்ற காதலையும், தன் சொல்லின் செல்வத்தால் உள்ளத்திற்குத் தெளிவாக்கிக் காட்டினனல்லவா?

சுக்கிரீவனுக்கும் ராமனுக்கும் ஏற்பட்ட நட்புக் காதலையும் தெரிவித்தான். பிறகு தான் அனுமன் தன் பேருருவத்தைச் சீதைக்குக் காட்டினன்.

அறிவிற்கு ஏற்ற உருவம் என்று சீதை வியந்தாள். ராமனையே அடைந்து விட்டது போல் கனுக் காணத் தொடங்கி விட்டாள்.

அனுமன் தானே சீதையை ராமனிடம் கொண்டு போய்ச் சேர்த்து விடுவதாகச் சொன்னதும், சீதையின் ஆனந்தக் கனவு தடைப்பட்டது. தன் காதலன், தான் சிறையிருக்கும் இடம் தேடி வந்து, அரக்கர் கோனை வதைத்துத் தன்னை மீட்டுக் கொண்டு போக வேண்டும் என்பதல்லவா சீதையின் கொள்கை?— காதலுக்குப் பரீட்சை, காதலிக்குப் பரிசு?

சூடாமணிப் படலத்திலே அனுமன் சொன்ன ஆறுதல் மொழிகளும், அந்த வசிகர வாக்கினல் இவள் மனக் கண் முன் தோன்றிய எதிர் காலக் காட்சிகளும், சீதையை மறுபடியும் உத்ஸாகப்படுத்தி, ஆனந்தக் கனவுகளைத் தொடர்ச்சியாகக் காணச் செய்தன.

சூளாமணியை அனுமனிடம் கொடுத்த பின்பு, சீதை மீண்டும் மீண்டும் கண்டு கொண்டிருந்த அந்த ஆனந்தக் கனவுகளைத் தான் இப்போதும் நினைவூட்டிக் கொள்கின்றாள். அந்தக் கனவுகள் எல்லாம் நான்கு காட்சியோடு கூடிய ஒரு நாடகமாகச் சீதையின் உள்ளத்திலே தோன்றிய வண்ணமாயிருந்தன.

முதலாவது, சீதையை அனுமன் கண்டுபோன காட்சி. இரண்டாவது காட்சியில், அனுமன் ஒரு நீண்ட வழியைக் காட்டிக்கொண்டு வர, வானரப் பெரும்படை பின்னே வந்து கொண்டிருக்கிறது.

மூன்றாவது காட்சியிலேயே ராவண வதம் ஆகி விடுகிறது. நான்காவது காட்சியோ மீட்சி தான்; சீதையை ராமன் வெற்றிப் பெருமிதத்துடன் அழைத்துப் போவதே. இக் காட்சியுடன் இந்த நாடகமே மங்களமாக முற்றுப் பெறுகின்றது.

ஆனல், இப்போது நாடகம் எதிர்பார்த்தபடி இனிது முற்றுப் பெறுகின்றதா, என்ன? நாடகம் தடைப்பட்டு விட்டதே! தடை செய்தவனும் அனுமன் தானே, —எனக்கு ஆருயிர் தந்த அனுமன் தானே!

சீதை புலம்பலின் இச் சிகரம் இந்தப் பகுதிக்கு விசேஷ சோபை தருகின்றது. பாட்டைப் பாடிப் பாடிப் பாருங்கள்:

கண்டு போயினை,
நீள்நெறி காட்டிட,
மண்டு போரின்
அரக்கனை மாய்த்(து),எனைக்
கொண்டு மன்னவன்
போம் எனும் கொள்கையைத்
தண்டி னய்,எனக்(கு)
ஆருயிர் தந்தநீ!

[மண்டு-நெருங்கிய. மாய்த்து-அழித்து. தண்டினய்-தடை செய்தாய்.]

இப்படி யெல்லாம் பிராட்டி அனுமனுக்கு நேர்ந்த கதி குறித்துப் பிரலாபித்துக் கொண்டிருக்கிருள். 'பயிரை வளர்த்தவனே அழிப்பதா?' என்பது போலப் புலம்புகிருள்.

இந்தப் பிரலாபத்திலே தளர்ந்து மயங்கிப் போகிருள்,

தீயைச் சுட்டதோர்
கற்பெனும் தீயினுள்

என்று இப்படியே சீதையை விட்டுவிட்டுக் கவிஞன், அனுமனையும் அவனைக் கட்டிச் செல்லும் இந்திரஜித்தையும் 'அதோ போய் விட்டார்களே, பாருங்கள்!' என்பது போலச் சுட்டிக் காட்டுகிருன். அந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து செல்ல விரைகின்ருன்.

* * *

இனிமேல் வருவதுதான் ராவணேசுவரனது படாடோபமான கொலுவைபவம். இதற்குமுன், 'சிறையிருக்குஞ் செல்வி'யின் துயரத்தைச் சித்திரித்துக் காட்டியிருப்பது எவ்வளவு கலைப் பொருத்தமாக இருக்கிறது!

சுந்தர ராமாயணம்



56. ராவணன் கொலு

மூவுலக ஆதிக்கத்திற்கும் அறிகுறியாய் ஓங்குகின்றது பிரம்மாண்டமான ஒரு சந்திர வட்டக் குடை, சபா மண்டபத்திலே. சுற்றிலும் ஜாலராகத் தொங்கி அசைந்து கொண்டிருக்கின்றன முத்துச் சரங்கள்: 'ஜிலு ஜிலு' வென்று எவ்வளவு தாவள்யமாய் ஒளிர்கின்றது அந்தக் கொற்ற வெண்குடை!

குடை நிழலில்

அந்தக் குடையைத் தூரத்திலிருந்து பார்க்கும்போது, தலைக்கு மேலே தூக்கியெடுத்த ஒரு வெள்ளியங்கிரி போலவும் காண்கிறது. ராவணன் பெயர்த்துப் பூமிக்கு மேலாகத் தன் தலைக்கு மேலே கைலையைத் தூக்கிவிட்டதாகத் தானே அந்தத் திக்விஜயக் கதை இலங்கை அரக்கர்களிடையே வழங்கும் தேச சரித்திரத்திலே வருகிறது.

வெள்ளியங்கிரியின் நிழலில் பொன் மலையாகிய மகா மேருவையே மகுடமாகத் தரித்துக்கொண்டு கருங் கடலே திரண்டெழுந்து ஜம்மென்று உட்கார்ந்திருப்பது போல் ஒரு காட்சியும் காண்கிறோம்.

அடுத்த கணத்தில், கருங்கடல் அல்ல, இருட்டுக்கே கால் கை முளைத்துவிட, அது அந்தி வானத்தை ஆடையாக உடுத்துக் கொண்டு, பூர்ண சந்திரனாகிய வெண்பட்டுக் குடை நிழலில் நட்சத்திர மாலைகளை ஆபரணமாக அணிந்து கொண்டு அரசு வீற்றிருக்கிறதோ?—என்று ஆச்சரியத்துடன் பார்க்கிறோம்.

அகில லோக பயங்கரனும் அரக்கர் கோனுமாகிய ராவணேச்வரன் அரசு வீற்றிருக்கின்ற வைபவம் தான் அது. இந்த அதிசயப் பெருஞ் சிறப்பு, பதினேழு கவிகளில் படிப் படியாக ஓங்கி நம் கண்ணையும் கருத்தையும் பறிக்கின்றன.

இப்போது முதலாவது கவியில் 'கைலையங்கிரியைத் தலைக்கு மேல் குடை போலத் தூக்கிக்கொண்டு அப்படியே வந்து விட்டானோ கொலு மண்டபத்திற்கு?' என்று நம்மைப் பிரமிக்கச் செய்யும் அந்த வெண் கொற்றக் குடையை உற்று நோக்குவோம்:

தலங்கள் மூன்றிற்கும்
பிறிதொரு மதிதழைத் -
தென்ன,
அலங்கல் வெண்குடைத்
தண்ணிழல் அவிர்ஒளி
பரப்ப,
வலங்கொள் தோளினால்
மண்நின்று வானுற
எடுத்த
பொலங்கொள் மாமணி
வெள்ளியங் குன்றெனப்
பொலிய,—

[தலங்கள் மூன்றிற்கும் – மூன்று உலகங்களுக்கும். பிறிது ஒரு மதி – வேறொரு சந்திரன். தழைத் தென்ன – தழைத்தாற் போல. அலங்கல் – முத்துச் சரங்கள் சுற்றிலும் தொங்கி அசையப் பெற்ற. தண் நிழல் – குளிர்ச்சியான நிழலையும், அவிர் ஒளி – விளங்குகிற ஒளியையும். வலம் கொள்–வலிமை கொண்ட. பொலம் கொள் – அழகு கொண்ட.]

முடிகளும் அணிகளும்

ஏதோ அரசு வீற்றிருப்பது போலவா காண்கிறது அந்தக் காட்சி?

இப்போது கருங்கடல் போலவும் தோன்றவில்லே; காரிருளே பொன்முடி கவித்து வெண்குடை நிழலில் வீற்றிருப்பது போலக் காண்கிறது :

சிந்து ராகத்தின்
செறிதுகில் கச்சொடு
செறிய,
பந்தி வெண்முத்தின்
அணிகலன் முழுநிலாப்
பரப்ப,



புவித்த டம்படர்
மேருவைப் பொன்முடி
யென்னக்
கவித்து மால்இருங்
கருங்கடல் இருந்தது
கடுப்ப,—

[புவித் தடம்-பூமியினிடத்தில். படர் – பரவியுள்ள. மால் இருங் கருங்கடல் – மிகப் பெரிய கருங்கடலானது. இருந்தது கடுப்ப – வீற்றிருப்பதை ஒப்ப.]

இந்து வெண்குடை
நீழலில் தாரகை
இனம்பூண்(டு)
அந்தி வானுடுத்(து)
அல்லுவீற் றிருந்ததாம்
என்ன,—

[சிந்துராகம் – சிந்துரம். துகில் – வஸ்திரம். கச்சு – அரைக்கச்சு; செறிய– சேர்ந்து விளங்க. பந்தி – வரிசை வரிசையாக. அணிகலன் – ஆபரணங்கள்.

முழு நிலா – பூர்ண சந்திரனின் காந்தி. இந்து – சந்திரன். தாரகை – நட்சத்திரம். இனம் – கூட்டம். அல்லு – இருட்டு.]

இந்த ஆச்சரியத்தை இன்னும் சற்றுக் கவனிப்போம். மரகதம் மாணிக்கம் முதலான இரத்தின வகைகளின் கிரண



காந்திகளையும், பலவித இரத்தினாபரணங்களின் ஜோதிகளையும் என்னென்பது?

ஆஹா. அந்தக் கிரீடங்கள் எத்தனை? — அந்தத் தலைகள் எத்தனையோ? ஆயிரம் தலை ஆதிசேஷன் தானோ சீறி யெழுந்து கம்பீர – பயங்கரமாய்ப் படம் விரித்து மூச்சு விடுகிறான்?

மரகதக்கொழுங்
கதிரொடு மாணிக்க
நெடுவாள்

நரக தேயத்துள்
நடுக்குறு இருளையும்
நக்க,

சிரம் அனைத்தையும்
திசைதொறும் திசைதொறும்
செலுத்தி,

உரகர் கோன் இனி(து)
அரசுவீற் றிருந்தனன்
ஒப்ப,—

[கொழுங் கதிரொடு – செழுமையான கிரணங்களோடு. கதிர் – ஒளி. நெடுவாள் – நீண்ட ஒளி. நரக தேயம் – நரக லோகம். நடுக்குறு – மறையாது நிறைந்த. நக்க – விழுங்கி விட. உரகர் கோன் – சர்ப்பங்களின் அரசனான ஆதிசேஷன்.]

ஆச்சரிய உணர்ச்சியை ஒருவாறு சமாளித்துக் கொண்டு அந்தக் கம்பீரமான பெரிய முகங்களைப் பார்ப்போம். முகமும் பார்வையுந்தான் நோக்கும் திசைகளை யெல்லாம் எப்படிப் பயமுறுத்துகின்றன!

வண்மையும் திண்மையும்

எட்டுத் திசைகளோடு ஆகாசத்தையும் பாதாளத்தையும் நடுங்கச் செய்த போதிலும் இப்போது அந்த முக காம்பீர்யம் நம்மை ஒருவாறு வசிகரிக்கவும் செய்கிறது. அத்தனை திசைகளி லிருந்தும் கொள்ளையடித்துக் கொணர்ந்த பொருள்களை அரக்கர் பேரூரை அழகு செய்ய வாரி வாரி வழங்கி யிருக்கிறான்!

அந்த முகங்கள் எவ்வளவு வண்மைக்கும், வைதிகக் கல்விக்கும், எவ்வளவு மகத்தானசௌகரியத்திற்கும்உறைவிடமாயிருக்கின்றன! அவ்வளவு வண்மையும் அறிவும் திண்மையும் அந்தக் கண்களில் அப்படியே ஜொலிக்கின்றன.

அந்தக் கண்பார்வையே போதும், உலகத்தை அப்படி இப்படி ஆட்டி வைத்துப் பயங்கர ஆட்சி செலுத்துவதற்கு:

வண்மைக் கும், திரு
மறைகட்கும், வானினும்
பெரிய

திண்மைக் கும்தனி
உறையுளாம் முழுமுகம்,
திசையில்

கண்வைக் கும்தொறும்,
களிற்ருெடு மாதிரம்
காக்கும்

எண்மர்க் கும்மற்றை
இருவர்க்கும் பெரும்பயம்
எய்த,—

[வண்மை—ஈகை. மறைகள் - வேதங்கள். திண்மை—வலிமை. தனி—ஒப்பற்ற. உறையுள்-இருப்பிடம். களிறு—திக்கஜம். மாதிரம்-திக்கு. எண்மர் — அஷ்ட திக்பாலகர்கள். மற்றை இருவர் — துருவன், ஆதிசேஷன் ஆகிய இருவர்.]

இப்படிப்பட்ட ராவண சபையிலே சிவனையும் விஷ்ணுவையும் சில ரிஷிகளையும் தவிர மற்றைத் தேவகணத்தார் எல்லாரும் அடிமைப்பட்டு அரக்கரோடு அரக்கராய்க் கலந்து சக்கரவர்த்தியின் கட்டளையை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். வானரமும் வாலில்லாத நரனும் தான் இங்கே காணப்படவில்லை. இந்த இருவகையினரும் ராவண ராஜ்யத்திலே கண்ணாலும் தீண்டத் தகாதவர்!

ஒரு புறம் யாழ் முதலிய இன்னிசைக் கருவிகள் இசைக்க, தேவமாதர்கள் பாடுகிறார்கள். ராவணனுடைய காதுகளில் அமிர்தம் சொரிந்தாற்போல் சொரிகின்றார்களாம் இன்னிசைப் பாடல்களை:

அரம்பை மங்கையர்,
அமிழ்(து)உகுத் தாலன்ன
பாடல்

வரம்பில் இன்னிசை
செவிதொறும் செவிதொறும்
வழங்க,—

[உகுத்தால் அன்ன — சொரிந்தாற் போன்ற. வரம்பில் இன்னிசை — அளவிறந்த இனிமையுள்ள கீதம்.]

ஒரு புறம் இசைப் பாட்டுக்கும் தாள அடைவுக்கும் இசைய மத்தளத் தொனியோடு ஒத்து வரும்படி அடிவைத்து, மனோபாவத்தை அபிநயத்தால் வெளியிட்டு மேனகை நாட்டியமாடுகிறாள். அந்த நாட்டியம் கண்டு ராவணன் புன்னகை புரிகின்றான்.

இந்த ஆடல் பாடல்களைத்தான் ரஸிகனை ராவணன் எவ்வளவு ஆவலோடு அனுபவிக்கிறான்:

பாடி னார்முகத்(து)
ஆரமு(து) ஒருமுகம்
பருக,

ஆடி னார்முகத்(து)
அணியமு(து) ஒருமுகம்
அருந்த,—

[அணியமுது — (இங்கே) அழகான அபிநய ரஸம்.]

இப்படிப் பத்து முகங்களும் பத்து விதமாகத் தொழிற்படும் விந்தையைப் பாருங்கள்.

ஒருமுகம் தனக்கு எதிரே பணிப் பெண்கள் ஏந்துகிற கண்ணாடியில் அழகு பார்க்கிறது. ஒரு முகம் தன் கீழ்க் குடிகளான தேவர்களோடு கலந்து பேசி ஆட்சி செலுத்துகிறது.

மும் மூர்த்திகளோடு கலந்து பெரிய பெரிய மந்திராலோசனைகளை நடத்தவும் முயல்கிறதாம் ஒரு முகம். ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்

தொழில்களிலும் குறுக்கிட்டு உலக தர்மத்தை நிலைகுலையச் செய்யும் சர்வாதிகார முயற்சிதான்! உலகத்தில் தீமையைப் பெருக்குவதற்காகத் தீய சிந்தனைகளைக் குறிப்பாக வெளியிடுகிறதாம் ஒரு முகம்.

பாவனை மிகுதியால் கண்ணுக்கெதிரே சீதையுருவம் தோன்றுகிறதாம். அந்த உருவெளித் தோற்றத்தைக் கண்டு களிக்கிறது ஒரு முகம், சீதையை நோக்கிக் கொஞ்சுவது போல.

நாலு முகங்களின் தோற்றத்தை நாம் இப் பாட்டிலே காண்கிறோம் :

தேவ ரோடிருந்(து)
அரசியல் ஒருமுகம்
செலுத்த,

மூவ ரோடுமா
மந்திரம் ஒருமுகம்
முயல,

பாவ காரிதன்
பாவகம் ஒருமுகம்
பயில,

பூவை சானகி
உருவொடும் ஒருமுகம்
பொருந்த,—

[மா மந்திரம் – பெரிய மந்திராலோசனை. பாவகாரி – பாவம் செய்பவன். பாவகம் – கருத்தைக் குறிப்பாகவும் இயல்பாகவும் வெளியிடுவது. பூவை – கிளி அல்லது மைனா.]

அணுக முடியாத ஒரு புதரிலிருக்கும் தேனைக் குடிக்க ஆசை கொண்டு அலையும் வண்டு போல் மதங்கொண்டு சுழல்கின்றது மனம். அது கண்டு சகிக்காமல் ராஜபத்தினிகள், உளம் வெந்து உடல் வெதும்புகிறார்கள்.

அவர்களுக்கு இவன் மேல் அவ்வளவு காதல்; இவனுக்கோ அவர்கள் இப்போது பெண்களாகவே தோன்றவில்லை!

அந்தப் பெண்களின் கண்கள் ராவணனைப் பார்த்த வண்ணம் சூரியனைக் கண்ட தாமரை போல் மலர்ந்திருக்க, அடிமைகளான தேவ–அசுரர்களுடைய கைகள் சந்திரனைக் கண்ட தாமரை போல் குவிந்திருக்கின்றனவாம். இப்படிக் கொலு வீற்றிருக்கும் ராட்சஸேந்திரனை அனுமன் தூரத்திலிருந்தே பார்த்து விடுகிறான்.

பார்த்த மாத்திரத்திலே பொல்லாத ஒரு நாகத்தைக் கண்ட கருடன் போல் துடிக்கிறான் என்று இந்தக் கொலு வைபவம் முற்றுப் பெறுகின்றது.

* * *

இதற்கு முன் இரண்டு தடவை ராவணனை அனுமன் பார்த்திருக்கிறான். ஊர் தேடு படலத்தில்,ராவணனின் மாளிகைக்குள்ளே புகுந்து,படுத்திருந்த அரக்கர் கோனை அனுமன் பார்த்த காட்சி பன்னிரண்டு கவிகளில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. அப்போதும் பெருங் கோபம் வந்து விட்டது அனுமனுக்கு. பிறகு தான் அடக்கிக் கொண்டான்.

இரண்டாம் தடவையாக அசோக வனிகையில் ராவணன் கம்பீரமாக நடந்து வந்து சீதையோடு உரையாடிய நிலையில் பார்த்திருக்கிறான். அப்போதும் வந்த கோபத்தை அடக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று.

அக் காட்சிகளுடனும், ஆரணிய காண்டத்திலுள்ள கொலு வைபவத்துடனும், இக் கொலு மாட்சியை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.



" என்னங்க நட்டுவனாரே !... பள்ளிக்கூடத்திலே நாட்டிய வகுப்புக்கு ஆசிரியரா இருக்கீங்களே, பிழைப்பு எப்படி இருக்குது ?... "

. " என்ன பிழைப்புங்க! ...... அந்தப் பள்ளிக்கூட ஹெட்மாஸ்டர் சொல்றத்துக்கெல்லாம் தகுந்த மாதிரி கூத்தாட வேண்டி இருக்குது !...... "

வீணை உடைந்தது!

எம். கே. சங்கரன்

நடராஜனை அவசரமாகக் கூப்பிட்டிருந்தார் அவன் குருநாதர் சோமசுந்தரம். என்னவோ ஏதோ என்று எண்ணிக் கொண்டே அவர் வீட்டிற்கு ஓடோடினுன் நடராஜன்.

வீட்டின் தனியறை ஒன்றில் கட்டிலில் படுத்திருந்தார் சோமசுந்தரம். அவர் படுத்திருந்த நிலைமையையும், வீட்டார் அவருக்குச் செய்யும் பணிவிடைகளையும் கண்டவுடன், அவருக்கு ஏதோ வியாதி என்பதை ஊகித்துக் கொண்டான் நடராஜன்.

"வாப்பா, நடராஜா! உன்னைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்" என்று முக்கி முனகிக் கொண்டே கூறினுர் சோமசுந்தரம். நடராஜன் அவர் அருகில் அமர்ந்து கொண்டு, "உங்களுக்கு என்ன செய்கிறது?" என்று மிகுந்த அக்கறையுடன் விசாரித்தான்.

"ஒரு வாரமாய் சுகமில்லை. சாப்பாடுகூடக் கிடையாது. உனக்கு ஒண்ணும் தெரியாதா?"

"தெரியாதே!"

"உன்னைத் தான் இந்தப் பக்கமே காணுகிறதில்லையே! உனக்குக் கச்சேரி ஏதாவது கிடைக்கிறதோ?"

"ஏதோ, தெரிந்த வீட்டில் கல்யாணங்கள் வந்தால் கூப்பிடுவார்கள். சங்கீத சபாக்களில் இருந்தும் ஒன்றிரண்டு 'சான்ஸ்' கிடைக்கும்."

"யாருக் கெல்லாமோ சிட்சை சொல்லிக் கொடுப்பதாகக் கேள்விப் பட்டேனே?"

"ஆமாம். தேவராஜ பிள்ளை மகள் ஜயா, லக்ஷ்மி மகள் பங்கஜம், குமாரி கனகம், துளசி இவர்களுக் கெல்லாம் நான் தான் சிட்சை சொல்லிக் கொடுக்கிறேன்."

"என்னப்பா! ஒரே பெண்கள் மயமாய்ப் போய் விட்டது!"

"என்ன செய்கிறது! அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதால்தான் அரை வயிற்றையாவது கழுவிக் கொண்டிருக்கிறேன்."

"அதற்காகச் சொல்ல வில்லை. எல்லோரும் ஒரே பருவப் பெண்களாயிற்றே என்று தான் பயப்படுகிறேன். நீயோ வயசுப் பிள்ளை. போதாததற்குக் கல்யாணம் ஆகாதவன்."


"அதனால் என்ன?"

"என்னவா? நடராஜா! நீ நல்ல பாம்போடு உறவாடிக் கொண்டிருக்கிறாய்! பெண்கள் தங்கள் அழகாலும் பருவத்தாலும் சங்கீத உலகத்தையே நிர்மூலமாக்கி விட முடியும்..."

நடராஜன் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன யோசிக்கிறாய்? நீ பெண்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதை நிறுத்தச் சொல்லி விடுவேனே என்று பயப்படுகிறாயா? அப்படி நான் சொல்ல மாட்டேன். உன்னிடம் படிக்கும் பெண்களோ பருவப் பெண்கள். சமயத்தில் உன் மனம் மிரளக்கூடும். அப்பொழுது தான் நீ உன் உறுதியைக் காக்க வேண்டும். வாலிபத் துடுக்கினால் உன்னிடம் படிக்கிற பெண்களை வீணாக்கி விடாதே! நீ அப்படியெல்லாம் செய்ய மாட்டாயென்று எனக்குத் தெரியும். என்றாலும், குருவென்ற முறையில் சொல்வது என் கடமை. சிஷ்யைகளை உன் புதல்விகளாக நினைத்துக் கொள். தந்தையைப் போல் கண்ணியமாக நடந்து கொள்."

நடராஜன் பதிலொன்றும் கூறவில்லை. அவன் மனம் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. அவனுடைய மௌனம் அவருக்கு நம்பிக்கையை அளித்தது. சந்தோஷத்தினால் அவர் முகம் மலர்ந்தது.



சுந்தர ராமாயணம்

பி. ஸ்ரீ

57. 'அமர்த் தொழில் அழகன்று'

ராவணேச்வரனுடைய கொலு வைபவம் முதன் முதல் ஆரணிய காண்டத்திலே வருணிக்கப்படுகிறது. தன்னுடைய மனோரதத்திற்கு இடையூறாக இருந்த சீதா தேவியைப் பிரித்துப் பழி வாங்கும் நோக்கத்துடன் சூர்ப்பணகை வருகின்றாள். ராவணனுடைய ஆதிக்கம் மகோன்னத நிலையில் இருக்கிறது. ஆம், மூன்று லோக ஸாம்ராஜ்யத்தின் மாட்சிக்கு இசைந்தவாறு அந்தக் காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது.

முதலாவது கொலு

'உலக மூன்று உடையவன் தங்கை மூக்கிலள்!' என்பதாகச் சூர்ப்பணகை வரக் கொலு விருக்கும் வைபவத்தைக் கம்பன், சமுத்திரம் பேரலையும் சிற்றலையுமாக வீசுவது போன்ற ஒரு வகை நடையில் வருணிக்கப் பார்க்கிறான். அடக்கத்திற்குள் அமைந்து காணும் அபார சக்தி இங்கே அவ்வளவாகப் புலனாக வில்லை.

'பெரும் பயம் கிடந்த நெஞ்சினர்' சூழ்ந்து பணி வேண்டி நிற்கிறார்கள். இயற்கைச் சக்திகளின் அதி தேவதைகளும் சலாம் செய்து பணி புரிகின்றன.

சிவபெருமானுக்கும் முதுகுக்கு மண் காட்டி விட்டதாக 'ராஜவாழ்த்து' இசையுடன் தும்புருவால் பாடப்படுகிறது. பிரகஸ்பதி பகவானும் சுக்கிராசாரிய ஸ்வாமியும் பணியாளருக்குரிய நீண்ட சொக்காய் அணிந்து பொற்பிரம்பு பிடித்துத் தலைமைச் சேவகம் நடாத்துகிறார்கள்!

எனினும் இந்த ராவண தர்பார் தனக்குரிய கவி கதியைக் கண்டு கொள்ள வில்லை. விருத்தங்களை மாற்றி அமைத்துப் பார்த்தும், கருத்திலுள்ள காம்பீர்யம் கவிதா ரூபத்துடன் முற்றும் இசைந்து விட வில்லை. முதல் முயற்சி தானே?

சயன வைபவம்

இனி நாம் ராவண வைபவத்தைச் சுந்தர காண்டத்திலே தான் பார்க்கிறோம். இலங்கையூரில் சீதையைத் தேடிய அனுமன் அரண்மனைக்குள் புகுந்து, படுத்திருக்கின்ற நிலையில் ராவணனைப் பார்க்கிறான். இந்த நிலைமையும் ஒரு கொலு வைபவம் போல் விசேஷ மனோபாவத்துடன் வருணிக்கப்படுகிறது.

இங்கும் விருத்தங்களை மாற்றியமைத்துப் பார்க்கிறான் கவி. அறு சீர் ஆசிரிய விருத்தங்களிலும் சில வேறு பாடுகள் செய்து காம்பீர்ய உணர்ச்சியை அதிகரிக்கச் செய்கிறான். சொல்லும் பொருளும் சிறப்பாக இசைந்து கவிஞனுக்குப் பணி புரிகின்றன இங்கே.

ராவணனைக் கண்ட பெருங் கோபத்துடன் இக் காட்சி முற்றுப் பெறுகின்றது. அனும கோபம் ஆலோசனைக்கு அடங்குவது போல், உற்பாதங்களுடன் தொடங்குகின்ற இந்த ராவண வைபவ

மும் வர வர அடக்கமாகவும் சக்தியுடனும் வருணிக்கப்படுகிறது.

மிடுக்கான வருகை

அப்பால் அசோக வனிகையில் ராவணனது கம்பீர வருகை வருணிக்கப்படுகிறது. கவிதா ரூபத்திலே ராவண ரூபத்தையே கண்டு விடுகிறோம் என்று பிரமிக்கும்படி நீளமான விருத்தங்களின் (பெயரைக் கேட்டு அஞ்ச வேண்டாம்: எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்கள்) வாயிலாக ராவணாகாரமான தோற்றத்தையும், அந்த மிடுக்கான நடையையும் அப்படியே காண்கிறோம்.

வேறொருவருக்கும் இடமே இல்லையோ என்று பிரமிக்கும்படி உலகத்தை அடைத்துக் கொண்டு வருவது போன்ற ஓர் உணர்ச்சி வாசகர்களுக்கு ஏற்படுகிறது,— முதலாவது விருத்தத்தைப் பாடும்போதே இந்த மயக்கத்தைப் பூர்த்தி செய்கின்றன சப்த ஜாலங்கள்,— பல நீண்ட விருத்தங்களின் சமுத்திர கோஷங்கள்!

'அதோ பொறிகள், புள்ளிகள், கோடுகள், — அடடா என்ன வலிமை, என்ன கோபாக்கினி! — பந்தம் எரிவதும் புகைவதும் ஒத்த கண்கள்!' என்றெல்லாம் காட்டி, 'பார் பார், அந்தப் பதினாறடி வேங்கையை!' என்று பயமுறுத்துவது போல முடிகின்றது இந்த வருணனைப் பகுதி: ஆரணிய காண்டத்திலே ஆரம்பமான முயற்சி இங்கே வெற்றி சூடுகின்றது.

அனுமன் கண்ட கொலு

இதற்கு மேலான வெற்றியையும் பெற்று விடுகிறது, கட்டுப்பட்ட அனுமன் வரக் கொலுவிருக்கின்ற ராவண வைபவம். அபார சக்தி அடங்கிப் பணி புரிகின்றது இங்கே. சப்த ஜாலங்களும் மணியோசை போல் கவனத்தை இழுக்காமல், மந்திரம்போல் அடங்கி ஒலித்து இதயத்தை வசீகரிக்கின்றன.

'நிந்தனைப் படல'த்திலே 'தலை தொறும் தலைதொறும் தயங்கும்' பொன் மகுடங்கள், இப்போது கருங்கடல் மீது தோன்றும் பொன்மலை போல் அகண்டாகாரமாய்க் காண்கின்றன. 'திசை தொறும் திசை தொறும் செலுத்திய' பத்துச் சிரங்களும் ஆதிசேஷனின் ஆயிரம் படங்



களைப் போல் உயர்ந்து நிமிர்கின்றன. ஒவ்வொரு முகமும் நோக்குந் திசையெல்லாம் பெரும் பயம் இயற்றுகின்றது.

முருகக் கடவுளின் ஆறு முகங்களையும் பக்த கவி வருணிப்பதுபோல் ராவணனுடைய பத்து முகங்களும் தொழிற்படும் விந்தையைக் கவிஞன் வருணிக்கிறான். 'என்ன ரஸிகத் தன்மை! என்ன அரசியலறிவு, ஆலோசனைத் திறன்!' என்று பிரமிக்கிறோம். தீய சிந்தனைகளையும் மதங் கொண்ட காம நினைவுகளையும் குறிப்பாகக் காண்கின்றோம் சில முகங்களில்.

ராவணனைக் கண்ட அளவிலே கோபங் கொள்கிறான் அனுமன்: படுத்திருக்கின்ற ராவணனைப் பார்த்த நிலையிலும் அனுமனுக்குக் கோபத் தீ உக்கிரமாகப் பொங்கியது.

'ராம பத்தினியை வஞ்சித்துக் கவர்ந்தவனுடைய மணிமுடிகளை உதைத்துத் தள்ளித் தலை பத்தும் தகர்த்து விடுவோம்' என்று எண்ணினான். 'ராவணனை முடித்து இந்த ஊரையும் முடித்து விடுவோம்' என்று பல்லைக் கடித்துக் கைகளைப் பிசைந்து எழுந்தான். பிறகுதான் தன்னைத் தானே அடக்கிக் கொண்டான்.

'நிந்தனைப் படல'த்திலே ராவணன் பிராட்டியை நோக்கிச் சீறியெழுந்ததும் அனும கோபம் அளவு கடந்து பொங்கிவிட்டது, 'தான் மறைந்திருந்த மரக்கிளையிலிருந்து அப்படியே ராவணனுடைய தலைகள் மீது குதித்து அவற்றை மோதிச் சிதறடித்து விடுவோம்; இலங்கையையும் கடலுக்குள்ளே மூழ்கடித்து விடுவோம்!' என்றெல்லாம் வெகு விரைவில் எண்ணமிட்டு உடனே தன்னை அடக்கிக் கொண்டான். ராவணனுடைய காதலே அவன் சினத்தைத் தணித்து விட்டதால் அனும கோபம் வெளியிட இடமில்லாமற் போயிற்று.

இப்போது கட்டுப்பட்ட நிலையில் ராவணனுடைய ஸாம்ராஜ்யக் கொலுவைக் கண்டதும் கரும்பாம்பைக் கண்ட கருடன் போலாகி விடுகிறான்:

இருந்த எண்திசைக்
கிழவனை மாருதி
எதிர்ந்தான்;
கருந்திண் நாகத்தை
நோக்கிய கலுழனிற்
கனன்றான்,



'திருந்து தோளிடை
வீக்கிய பாசத்தைச்
சிந்தி
உருந்து, நஞ்சுபோல்—
பவன்வயின் பாய்வென்'
என்(று)
உடன்றான்.

[இருந்த — கொலுவிருந்த. எண் திசைக் கிழவன் — எட்டுத் திசைகளையும் வென்று உரிமை பூண்டிருந்த சர்வாதிகாரி. மாருதி — அனுமன். கருந்திண் நாகத்தை — கரிய வலிய சர்ப்பத்தை. கலுழனின் — கருடன்போல. கனன்றான் - மனங்கொதித்தவனாய். திருந்து தோளிடை - சிறந்த என் தோள்களில். வீக்கிய — கட்டியிருக்கிற. உருந்து — கோபித்து. நஞ்சு போல் பவன் வயின் — விஷம்போல் கொடியவனான ராவணன் மேல். உடன்றான் — உக்கிரம் கொண்டான்.]

இந்தக் கோபத்திலே கொதித்தெழு கின்ற ஆலோசனை நான்கு கவிகளில் வருணிக்கப்படுகிறது, 'உறங்கிக் கொண்டிருந்தபோது கொல்வது பழிப்பென்று விட்டு விட்டேன். இப்போது இந்தப் பொன்மணிச் சிங்காதனத்தில் வைத்தே இவனுடைய முடித்தலைகளைச் சிதறடிப்பேன்; சீதா பிராட்டியைச் சிறை மீட்டுப் போவேன்' என்று ஆலோசிக்கிருன்.

சூளாமணிப் படலத்தில் 'அது காரியமன்று' என்று சீதை சொன்ன வாசகத்தை இப்போது இந்தக் கோபத்திலே மறந்து போய் விடுகிருன். 'பாவகாரிதன் முடித்தலை பறி'த்தலே கருமமென்று கருதுகின்ருன்.

'ராவணனுக்கு அருகேயுள்ள மங்கையர் திகைத்து உள்ளே ஓடிப் போவார்கள், முடித்தலைகளைத் திசைகள் தோறும் நாம் உருட்டும்போது!' என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்கிருன். 'வெற்றி கொண்டு ஆரவாரம் செய்கிறதே குரங்கு!' என்று சொல்லிக் கொண்டே ஓடுவார்களாம் அந்த மங்கையர். 'அது கொடிதம்மா!' என்று பேசிக் கொள்வார்களாம்.

அனுமனுடைய இந்த மனோராஜ்யத்தைப் பாருங்கள்:

'ஆடல் கொண்டுநின்(று)
ஆர்க்கின்ற(து), அதுகொடி(து)
அம்மா!
தேடி வந்ததோர்
குரங்(கு)'எனும் வாசகம்
சிறிதோ?

[ஆடல் - (இங்கே) வெற்றி.]

இந்த நிலையில் 'இந்த ராவணனுடைய மகனல் கட்டுப்பட்டோமே' என்ற மான உணர்ச்சியும் வருகிறது. 'அதற்காக நான் தற்கொலை புரிந்து கொள்ள வேண்டியதுதான்!' என்று கூட நினைக்கிருன். எனினும் தான் அப்படிச் செய்யாது உயிர் வைத்துக்கொண்டிருந்தது ராவணனைச் சந்தித்துத் தூது சொல்லி மீள வேண்டும் என்பதற்காகத் தானே?

ஆனல் அது மாத்திரம் செய்வது போதாதென்று இப்போது தோன்றுகிறது. கட்டுண்டான் அனுமன் என்ற உலக நிந்தனைக்கு ஒரு பரிகாரம் வேண்டுமல்லவா? அதற்காகவாவது ராவணனைத் துணிந்து எதிர்க்க வேண்டியது தான் என்று எண்ணுகிருன்.

ராவணனை எதிர்த்தால் வெற்றி கிடைப்பது நிச்சயம் தானு? பெரும்பாலும் வெற்றிதான் என்றே நினைக்கிருன். ஒருகால் தான் வெல்லப்பட்டாலும் கொல்லப்பட்டாலும் கூடப் பழியில்லை, புகழ்தான் என்றும் உறுதி கொள்கிருன்.

'தோளில் கட்டியிருக்கும் நாக பாசத்தை அறுத்துக் கொண்டு குன்றின் மேல் பாயும் சிங்கம் போல் ராவணன் மேல் பாய்ந்து விடுவேன்!' என்று துணிந்து சிந்தனை செய்யும்போதே, 'அது காரியமன்று' என்று நியாய புத்தி பளிச்சென்று உட்குரல் காட்டி எச்சரிக்கை செய்கிறது.

சூளாமணிப் படலத்திலே சீதை தன்னை நோக்கிக் கூறியது மின்னெழுத்துக்களில் படுவேகமாய்த் தன் கண்முன் பாய்ந்து வருகிறது.

இன்னம் ஈண்டொரு
திங்கள் இருப்பல்யான்


என்று தொடங்கிச் சீதை சொன்ன வாசகம் நினைவிற்கு வந்ததும், 'இப்போது போரிடப் பொழுது போக்குவது வெறுந்தவறு' என்று முடிவு கட்டுகிருன்:

'இங்கொரு திங்களே
இருப்பல் யானென,
அங்கண்நா யகன்தன(து)
ஆணை கூறிய
மங்கையும் இன்னுயிர்
துறத்தல் வாய்மையால்,
பொங்குவெஞ் செருவிடைப்
பொழுது போக்கினல்.

தவணை வைத்து அந்த உறுதியை வற்புறுத்தக் கணவன் மேல் ஆணையிட்டுப் பேசினளல்லவா? அந்த நினைவு வந்ததும், போரிலே காலங் கழிக்கக் கூடாது என்ற உறுதி அனுமனுக்கு வந்து விடுகிறது:

'ஆதலான் அமர்த்தொழில்
அழகிற் றன்(று);அருந்
தூதனும் தன்மையே
தூய்தெ'ன்(று) உன்னினன்
வேதநா யகன்தனித்
துணைவன்; வென்றிசால்
ஏதில்வாள் அரக்கன(து)
இருக்கை எய்தினன்.

[அமர்த்தொழில்-போர்த்தொழில். அழகிற்று அன்று – அழகுடையதன்று. தூய்து – தூயது: வென்றி சால் - வெற்றி மிக்க. ஏதில் வாள் அரக்கன் – பகைமையுள்ள கொடிய ராவணன். இருக்கை – கொலு விற்றிருக்குமிடம்.]



சுந்தர ராமாயணம்

பி. ஸ்ரீ

58. அடுக்கு வினாக்கள்

இந்திரஜித்து அனுமனை ராவணனிடம் ஒப்படைக்க வேண்டியது தான். 'அந்தக் குற்றவாளியை இதோ கைதியாக்கிக் கொண்டு வந்திருக்கிறேன்; தண்டித்து விடுங்கள்' என்று தான் வெற்றிப் பெருமிதம் தோன்ற ஒப்புவிக்கப் போகிறானா?

மைந்தன் நிலை

எப்பேர்ப்பட்ட இந்திரஜித்து! எப்பேர்ப்பட்ட ராவணன்! குற்றவாளி செய்தது தான் சாதாரணக் குற்றமா?

காட்டினன் அனுமனைக்
கடலின் ஆரமு(து)
ஊட்டிய உம்பரை
உலைய ஓட்டினான்.

[கடலின் ஆரமுது — பாற்கடலினின்று தோன்றிய அருமையான அமிர்தத்தை. ஊட்டிய — (இங்கே) உண்ட. உம்பரை— தேவர்களை.]

தேவர்களோடு தேவேந்திரனையும் முதுகு காட்டி ஓடச் செய்து ஜய ஸ்தம்பம் நாட்டியவன் இந்திரஜித்து. தந்தையோ,

புவனம்எத் தனைஅவை
அனைத்தும் போர்கடந் —
தவன்.

இப்பேர்ப்பட்ட ராவணேசுவரனுக்கு அனுமனைக் கட்டிக் காட்டிய இந்திரஜித்து, ஒரு பிரபலமான — அபாயகரமான — கைதியை ஒப்படைப்பது போலவும் பேசவில்லை. விசேஷ மரியாதைக்கு உரிய ஒரு விருந்தாளியை அறிமுகப் படுத்துவது போலவே வெகு கௌரவமாய்ப் பேசுகிறான்:

புவனம்எத் தனைஅவை
அனைத்தும் போர்கடந் —
தவனைஉற்(று), 'அரியுரு —
வான ஆண்தகை
சிவனெனச் செங்கணான்
என்னச் சேவகன்
இவன்!' எனக் கூறிநின்(று)
இருகை கூப்பினான்.

[உற்று — (இங்கே) அடைந்து நோக்கி. அரி உருவான — குரங்கு வடிவமாக இருக்கிற. ஆண்தகை — ஆண்மைக் குணம் வாய்க்கப் பெற்ற இவன். செங்கணான் — திருமால். சேவகன் — வீரன்.]

உலகங்களை யெல்லாம் வெற்றி கொண்ட ராவணன் அனுமனைச் சாமானியமாக உருவம் நோக்கி மதித்து விடலாகாது என்பது இப்போது இந்திரஜித்தின் கவலை. அதற்காகத்தான் 'அரியுருவான ஆண்தகை' என்கிறான். 'ஆண்மையே ஒரு குரங்கு வடிவத்தில் வந்து விட்டது!' என்பது கருத்து.

பிறகு சிவனை, திருமாலைப் போன்ற ஒரு மகா புருஷன் என்கிறான். இப்படிச் சொல்லியும் திருப்தி யடையாமல், கடைசியாய் எல்லாவற்றுக்கும் மேலாக, 'வீரன் இவன்!' என்கிறான்.

இது அனுமனது வீரத்தை எடுத்துக் காட்டுவதுடன் இந்திரஜித்தின் வீர குணாதிசயத்தையும் தூக்கிக் காட்டுகிறது. 'வீரத்தின் பன்மை' தீர்த்தவனல்லவா இந்திரஜித்து? தான் ஒருவனே வீரன் என்பதை நிலைநாட்டி

அதே நினைப்பில் இருந்தவன். 'இனி வீரத்தின் ஒருமை 'தீர்ந்து விட்டது' என்றே கருதினன் அனுமனின் போர்த் தொழில் கண்டதும்.


அந்தப் போர்த் தொழில் நன்றென உவகை கொண்டான், போர்க் களத்தைக் கண்டதுமே. தன் சேனை அழிக்கப்பட்ட பின் இந்திரஜித்து அனுமனை நோக்கி,

நல்லை, நல்லை இந் -
ஞாலந்துள் நின் ஒக்க
நல்லார்

இல்லை, இல்லையால்
எறும்வலிக்கு!

என்று சொன்னன். அனுமன் கட்டுப்பட்ட பின்பும் அந்த அபிப்பிராயத்தை இந்திரஜித்து மாற்றிக் கொள்ளவில்லை.

தன்னுடைய வீரத்திற்குத் தகுதியான ஒரு வீரனைக் கண்டு பிடித்து விட்ட கம்பீர உவகை ஒலிக்கின்றது, ஒளிர்கின்றது, இந்திரஜித்து அனுமனை ராவணனுக்கு அறிமுகப் படுத்தும் வாக்கிலே. ராவணனுக்கோ இருபது கண்களிலும் ஒளிர்கின்றது கோப நெருப்பு, அனுமனை எரித்து விடுவதுபோல!



தந்தை நிலை

உக்கிரமாகப் பார்த்துக் கடுமையாகப் பேசத் தொடங்குகிறன்:

அன்னஓர் வெகுளியன்,
அமரர் ஆதியர்

துன்னிய துன்னலர்த்
துணுக்கம் சுற்றுற,

'என் இவண் வரவு! நீ
யாரை ?' என்(று) அவன்

தன்மையை வினயினன்,
கூற்றின் தன்மையான்.

[அன்ன – அப்படிப்பட்ட. ஓர் வெகுளியன் – ஒரு பெருங் கோபமுடையவனாய். அமரர் ஆதியர் துன்னிய – தேவர் முதலானவராக எங்கும் நெருங்கியிருக்கிற. துன்னலர் – பகைவர்களை. துணுக்கம் – அச்சம். சுற்றுற – சுற்றிக் கொள்ளும்படி. என் இவண் வரவு – இங்கு நீ வந்த காரணம் என்ன. நீ

யாரை — நீ யார். வினுயினுன் — வினவலானுன். கூற்றின் தன்மையான் — யமனது தன்மையையுடைய ராவணன்.]

இப்படித் தொகுத்துச் சுட்டிய வினுவை. அடுத்து ஒரு தொடராக வரும் நான்கு கவிகளும் வகுத்துக் காட்டுகின்றன. இந்தக் காவிய மரபினைக் கம்ப ராமாயணத்திலே பல இடங்களிலும் காணலாம்.

ராவணனுடைய வினுக்களை விவரமாகக் கவனிப்பதற்கு முன்,



நன்ருக உணர்ந்து கொள்ள வேண்டும். அந்தத் தேவர் குழாத்தினைத்

துன்னிய துன்னலர்

என்று கவி கூறுவதைச் சற்றுக் கவனிப்போம்.

ராவணன் பகைத்து எதிர்த்துப் போராடி வென்று அவர்கள்மீது அடக்குமுறையாட்சி நடத்தி வருகிறுன். எனவே, அவர்கள் உட்பகை கொண்டவர்களாய்ச் செல்லாக்கோபத்தை வெளியே காட்டாமல் அடங்கி ஒடுங்கி ராவணனைச் சூழ்ந்து அடிமைப் பணி செய்து கொண்டிருக்கிருர்கள். இத்தகைய 'சேராச் சேர்த்தி'யைக் குறிப்பிடுவது 'துன்னிய துன்னலர்' என்னும் சொற்ருெடர்.

'துன்னலர்' என்ருல் சேராதவர்; பகைவர். 'துன்னிய' என்பதற்குச் 'சேர்ந்திருக்கின்ற' என்று பொருள். இந்தச் சொற்ருெடரைத் 'தொடை முரண்' என்பர்.

இத்தகைய தேவ கணத்தவர்மீதும் சந்தேகம் கொண்டு இவர்களும் நடுங்கும்படி உக்கிரமாகப் பேசுகிருன் அனுமனை நோக்கி. தயை தாட்சிணியம் அற்ற கோபாவேச நிலையில் ராவணன் பயங்கரமான ஒரு யம ஸ்வரூபம் பெற்றவனைப் போலத் தோன்றுகிருன் அவர்கள் கண்களில் என்பது மூன்ருவதாக நாம் கவனித்துக் கொள்ள வேண்டிய விஷயம்.

மேலே சொன்ன செய்யுளில் குறித்திருக்கும் ராவணனுடைய நிலையைக் கருத்தூன்றிக் கவனித்துக் கொள்ள வேண்டும். முதலாவது, ராவணன் மகா உக்கிர கோபத்திலிருக்கிருன் என்பதை மறக்கலாகாது.

இரண்டாவது, தன்னைப் பரிவாரமாகச் சுற்றி நிற்கும் அடிமைத் தேவர் முதலானவர்களின் மன நிலையை ராவணன் நன்குணர்ந்திருக்கிருனென்பதை நாமும்

இதைத்தான் இந்தச் செய்யுள்,

கூற்றின் தன்மையான்

என்று கொடுக்கில் வைத்துக் காட்டுவது போல் முடித்துக் காட்டுகிறது.

நான்காவதாக நாம் நினைத்துப் பார்க்க வேண்டியது, ராவணனுடைய இப்போதுள்ள மனநிலையில் கோபத்தோடு பதற்றமும் கலந்து குழம்புகிறது என்பது. இனி, தொகுத்துச் சுட்டிய வினாக்கள் எப்படி வகுத்துக் காட்டப் பெறுகின்றன என்பதை நோக்குவோம்.

சரமாரியான கேள்விகள்

இந்த நான்கு கவிகளில் முதலாவது கவி வருமாறு;

நேமியோ? குலிசியோ?
நெடுங்க ணிச்சியோ?
தாமரைக் கிழவனோ?
தறுகண் - பஃறலைப்
பூமிதாங்(கு) ஒருவனோ?
பொருது முற்றுற
நாமமும் உருவமும்
கரந்து நண்ணினாய்!

[நேமியோ — சக்ராயுத பாணியான திருமாலோ. குலிசியோ — குலிசம் என்று சொல்லப்படும் வச்சிராயுதத்தையுடைய தேவேந்திரனோ. நெடுங்கணிச்சியோ — நீண்ட சூலாயுதத்தையுடைய சிவபெருமானோ. தாமரைக் கிழவனோ — தாமரை மலரில் தோன்றிய பிரம்மதேவனோ. தறுகண் - அஞ்சாமையையும். பஃறலை-பல தலைகளையும் உடைய. பூமி தாங்கு ஒருவனோ — பூமியைத் தாங்குகின்ற ஒப்பற்ற ஆதிசேஷனோ. பொருது முற்றுற — போராடி நாசமடையுமாறு. நாமமும் உருவமும் — பெயரையும் இயற்கை யுருவத்தையும். கரந்து நண்ணினாய் — மறைத்துக் கொண்டு இங்கே வந்து சேர்ந்தாய்.]

'மும்மூர்த்திகளில் ஒருவனா நீ?' என்று கேட்கிறவன், 'ஆயிரந்தலை ஆதிசேஷன் தான் இப்படி நாமமும் உருவமும் மறைத்துக் கொண்டு வந்திருக்கிறானா?' என்றும் கேட்கிறான். உட்பகைவராகத் தன்னைச்சுற்றி நிற்பவருக்கும், வந்திருப்பவனுக்கும் எப்படியோ தொடர்பு இருக்க வேண்டும் என்ற நினைப்பும் வருகிறது.

இந்திரஜித்தும் தானும் இருக்கும் இடத்திலே 'இந்திரன்தான் அசட்டுத்தனமாக மாறுவேஷம் பூண்டு நாசவேலைகளை நடத்தவும், உட்பகையை மூட்டிப் பார்க்கவும் வந்துவிட்டானோ?' என்று கூடக் கேட்கத் தோன்றுகிறது.

அனுமன் செய்த கொலைகளை நினைத்துப் பார்த்ததும் கோபம் மேலும் பொங்குகிறது. வினாக்கள் குழம்பித் தொடர்கின்றன:

நின்(று) இசைத்(து) உயிர்கவர்
நீலக் காலனோ?
குன்(று)இசைத்(து) அயில்உற
எறிந்த கொற்றனோ?
தென்திசைக் கிழவனோ?
திசைநின்(று) ஆட்சியர்
என்(று)இசைக் கின்றவர்
யாருள் யாவன் நீ?

[நின்று இசைத்து—நின்று தன் பாசத்தைக் கொண்டு கட்டி. காலனோ-யமனுடைய சேனைத் தலைவனாகிய காலனோ. அயில் — வேலாயுதம். கொற்றனோ — வெற்றியையுடைய முருகக் கடவுளோ. தென் திசைக் கிழவனோ — யமனோ.]

எரி மலைக்குள்ளிருந்து உருகிக் குழம்பு பட்டு வருவது போலத்தான் வார்த்தை வருகிறது, ராவணனுடைய நெருப்பைக் கக்கும் வாய்களிலிருந்து:

அந்தணர் வேள்வியின்
ஆக்கி ஆணையின்
வந்துற விடுத்ததோர்
வயவெம் பூதமோ?
முந்தொரு மலருளோன்
'இலங்கை முற்றுறச்
சிந்தெ'னத் திருத்திய
தறுகண் — தெய்வமோ?

[வய வெம்பூதமோ — வலிய கொடிய ஒரு பூதம்தானோ. முந்து ஒரு மலர் உளோன் — பழமையான ஒரு தாமரைப் பூவின்மேல், அதாவது, விஷ்ணுவின் நாபிக்கமலத்தில், வீற்றிருக்கிற பிரம்மதேவன். தறுகண் தெய்வமோ — பயமே தெரியாத தேவதையோ.]

இந்த வினாக் கவிகளில் கடைசியாக வரும் கவியையும் கேட்டு விடுவோம்:

'ஆரை நீ? என்னை இங்(கு)
எய்து காரணம்?
ஆர்உனை விடுத்தவர்?
அறிய ஆணையால்
சோர்வில சொல்லுதி'
என்னச் சொல்லினான்,
வேரொடும் அமரர்தம்
புகழ்வி ழுங்கினான்.

இவன் தான் கோபாவேசத்திலே தள்ளாடித் தடுமாறி முன்பின் பொருத்தமின்றி மறதியும் மெலிவுமாய் வினாக்களை அடுக்குகிறான்.



59. அவதார தத்துவம்

(இரண்டாவது இரகசியம்)

ராவணனுடைய கேள்விகள் பதறியும் சிதறியும், கோபப் பொறிகளாகவும், ஆணவத் துணுக்குகளாகவும் கனன்றும் புகைந்தும் வந்து விழுகின்றன. இவற்றையெல்லாம் சீன வெடிகளையும் மத்தாப்புப் பொறிகளையும் சிறுவர் நோக்குவது போல் விளையாட்டாகவே நோக்குகிறது அனுமனுள்ளம்.

'மூவருள் ஒருவனா?' என்று தொடங்கி, 'சிருஷ்டிகர்த்தா பயமே தெரியாத ஒரு விசேஷ சிருஷ்டியாகச் செய்து அனுப்பி வைத்த ஒரு புதுமைத் தெய்வமா நீ?' என்று முடித்துப் பிறகு சடசடவென்று பட்டாசு வெடிப்பது போல, 'யார் நீ? ஏன் வந்தாய்? அனுப்பியவர் யார்?' என்று படபடத்துக் கேட்ட ராவணனுக்கு, அனுமன் அமைதியாகப் பதில் சொல்லுகிறான். விழுங்கி விக்கிக் கக்குவது போல வந்த வினாக்களுக்குக் கிடைக்கும் உத்தரம், அத்தனை வினாக்களையும் ஜீர்ணித்துப் பேசும் விடைதான்.

வசீகரமான தொடக்கம்

எனினும், ராவணாகாரமான அந்த ஆணவத்திற்குச் சூடு கொடுத்தது போன்ற பீடிகையோடு பேசத் தொடங்குகிறான் அனுமன்:

'சொல்லிய அனைவரும்
அல்லன்; சொன்னஅப்
புல்லிய வலியினோர்
ஏவல் பூண்டிலேன்!

[புல்லிய — அற்பமான.]

தான் ராமதூதன் என்பதை இந்தப் பீடிகையிலேயே தொடர்ந்து சொல்லி விடுகிறான்:

அல்லியங் கமலமே
அனைய செங்கண் ஓர்
வில்லிதன் தூதன்யான்,
இலங்கை மேயினேன்.

[அல்லி அம் கமலமே அனைய செங்கண்—அக இதழ்களை யுடைய அழகிய செந்தாமரைப் பூவையே போன்ற செம்மையான கண்களை யுடைய.]

அனுமனுக்கு ராமன் மீதுள்ள காதல் வெளிப்படுகின்றது, 'அல்லியங் கமலமே அனைய செங்கண் ஓர் வில்லி' என்ற வாக்கிலே. மாய வாழ்விற்கெல்லாம் ஒரு நேய மருந்தாகிய அந்த வில்லி, — அறக் கருணையால் தன்னைப் போன்றவர்களுக்கு அருள் செய்பவன், — ராவணனுடைய தீய வாழ்விற்கு மறக்கருணை காட்டுவான் என்பதையும் தெளிவு படுத்துகிறான்:

ஈட்டிய வலியும்,
மேனாள் இயற்றிய
தவமும், யாணர்க்
கூட்டிய படையும்,
தேவர் கொடுத்தநல்
வரமும், கொட்பும்,
தீட்டிய பிறவும்,
எய்தித் திருத்திய
வாழ்வும் எல்லாம்,
நீட்டிய பகழி
ஒன்றால் முதலொடு
நீக்க நின்றான்.

[ஈட்டிய — நீங்கள் மிகுதியாகச் சம்பாதித்து வைத்திருக்கும், வலியும் — ஸ்தூல பலமும். யாணர் கூட்டிய படையும் — புதிது புதிதாக நீங்கள் கூட்டி வைத்திருக்கிற ஆயுதங்களும் சேனைகளும். கொட்பும் — 'வலிமையே உரிமை' என்ற உங்கள் மனக் கொள்கையும். தீட்டிய பிறவும் — நீங்கள் (கல்லிலும் செம்பிலும் எழுத்திலும்) எழுதி வைத்துக் கொண்டிருக்கும் பிரதாபச் செய்தி முதலியனவும். எய்தித் திருத்திய வாழ்வும் — நீங்கள் அடைந்து திருத்திக் கொண்ட ஆதிக்க வாழ்வு வகைகளும். பகழி — அம்பு. முதலொடு — அடியோடு.]

இங்கே அனுமனுடைய துடுக்கைக் காட்டிலும் மிடுக்கும், உண்மை மீதுள்ள உறுதியான பற்றும் புலனாகின்றன. உக்கிரமாக வினாக்களைத் தொடுத்து விட்டவனுக்கு, அனுமன் சத்தியத்திலும் தர்மத்திலும் உள்ள ஆக்கிரகத்துடனும், ஸாக்ஷாத் தர்மமாகிய ராமன் மீதுள்ள அசையாத நம்பிக்கையுடனும் பதில் சொல்கிறான்.

எனினும், அமைதியாகவே பேசுகிறான். 'நீ தேவேந்திரனா? திக்பாலகருள் ஒருவனா? மூவருள் ஒருவனா? முனிவர் அனுப்பிய பூதமா? கொள்ளுப் பாட்டன் அனுப்பிய புதுமைப் பூதமா?' என்றெல்லாம் புறப்பட்ட கேள்விகளுக்குச் சற்று நகைச் சுவையுடனும் விடை கூறுகிறான்:

தேவரும் பிறரும்
அல்லன்; திசைக்களி(று)
அல்லன்; திக்கின்

காவலர் அல்லன்;
ஈசன் கயிலையங்
கிரியும் அல்லன்;

மூவரும் அல்லன்;
மற்றை முனிவரும்
அல்லன்; எல்லைப்

பூவல யத்தை
ஆண்ட புரவலன்
புதல்வன் போலாம்.

[களிறு - யானை. பூவலயம் - பூமண்டலம். புரவலன்-சக்ரவர்த்தி; (இங்கே) தசரதர்.]

'வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு' என்பதை அந்த ஆணவக்காரனுக்குப் புரியும் பாஷையில் தெரிவித்த பிறகு, அந்த வில்வீரன் தர்ம ஸ்வரூபி என்பதையும், தர்மமும் கருணையுமே அந்த ஸத்திய வீரத்தின் உயிர்நிலை என்பதையும் வற்புறுத்துகிறான். அதே உத்ஸாகத்தில் ராமனுடைய தெய்வத் தன்மையையும் அறிவிக்கத் தொடங்குகிறான்.

அவதாரக் கொள்கை

இச் சந்தர்ப்பத்தில் கவிஞனுடைய பக்தி - உத்ஸாகமும், காவிய பாத்திரத்தின் பக்தியோடு சங்கமித்து ராமாவதார தத்துவத்தை வெளியிடப் பார்க்கிறது:

மூலமும் நடுவும்
ஈறும் இல்லதோர்
மும்மைத் தாய

காலமும் கணக்கும்
நீத்த காரணன்,
கைவில் ஏந்திச்

சூலமும், திகிரி
சங்கும், கரகமும்
துறந்து, தொல்லை

ஆலமும், மலரும்,
வெள்ளிப் பொருப்பும்விட்(டு)
அயோத்தி வந்தான்!

[மூலம் — ஆதி. ஈறு — முடிவு, மும்மைத்து ஆய — மூன்று வகைப்பட்ட. திகிரி — சக்கரம். கரகம் - கமண்டலம். தொல்லை — பழமையான. ஆலமும் — ஆலிலையும். மலர் — (இங்கே) தாமரை மலர். பொருப்பு — மலை.]

தர்மஸ்வரூபியான ராமபிரானை இங்கே திரிமூர்த்தி ஸ்வரூபியாகக் காட்டுவது, கவிஞனுடைய வேதாந்தக் கொள்கையை வெளியிடுவதோடு பரந்த சம



ரஸ மனப் பான்மையையும் காட்டு கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே 'கார ணம் கேட்டியாயின்' என்று தொடங்கி,

வாரணம் காக்க
வந்தான், அமரரைக்
காக்க வந்தான்.

என்று வருகிற பாட்டு ஒரு செருகு கவி தான் என்றே தோன்றுகிறது.

'ஆதிமூலமே!' என்று யானை கூப்பிட அதைக் காப்பாற்ற வந்த திருமாலே இப்போது ராவணவதம் செய்து தேவர் களைக் காக்க வந்திருக்கிறான் என்பது இப்பாட்டின் கருத்து. இது செருகு கவி யென்பதற்குக் 'கம்பர் காவியம்' என்ற நூலின் ஆசிரியர் 86-87-ம் பக்கங்களில் கூறியிருக்கும் காரணங்கள் பொருத்த மாகவே தோன்றுகின்றன. இத்தகைய அபிப்பிராயங்களைக் கூட ஓர் ஆராய்ச் சிப் பதிப்புக் குழுவினரின் முடிவிற்கு விட்டு விடுவது நலம்.

இச் சுந்தர காண்டத்திலே தான் இத் தகைய ராமாவதார தத்துவம் வெளி யிடப் பெறுகின்றது. பால காண்டத் திலே 'திரு அவதாரப் படலத்'தில் திரு மாலே ராமாவதாரம் செய்ததாகக் காணப்படுகிறது. மும்மூர்த்திகளும் ராமனாக அவதரித்த குறிப்பு அங்கே காணப்படவில்லை.

கிஷ்கிந்தா காண்டத்திலே சுக்கிரீவ னின் காட்சியாக அவதார ரகஸ்யம் வெளியிடப் பெற்றிருக் கிறது. முதன் முதல் ராமனை உத்தம புருஷ னாய்க் காணும் சுக்கிரீவன், அடுத்தபடியாக உலகத் திற்கே உரிய லட்சிய வீர னாக நோக்கி, முடிந்த முடி வாகத் தேவ தேவனாகவும் தெளிந்து சித்தாந்தம் செய்து விடுகிறான்.

அந்த நிலையில் சுக்கிரீவ னுடைய நினைப்பாகக் கவி ஞன்,

ஆறுகொள் சடிலத்-
தானும், அயனும்
என்(று)
இவர்களாதி
வேறுள குழுவை
எல்லாம் மானுடம்
வென்றதன்றே!


[ஆறு கொள் சடிலத்தான் - சிவ பெருமான். அயன் - பிரம்மா.]

என்று கூறியுள்ளான்.

அதே கவிஞன் இப்போது.

சூலமும் திகிரி
சங்கும் கரகமும்
துறந்து, தொல்லை
ஆலமும் மலரும்
வெள்ளிப் பொருப்பும்விட்(டு)
அயோத்தி வந்தான்.

என்று கூறி யிருப்பதைக் கூர்ந்து நோக்க வேண்டும்.



அங்கே 'மானிடத்தின் வெற்றி'யே அவதார ரகஸ்யம் என்பது கம்பன் கருத்து. வைணவர்கள் அவதாரத்தினுலே திருமாலுக்கு வெற்றி கூறுவர். சைவர்களோ 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்று சிவபெருமானுக்குப் பெருமையும் வெற்றியும் காட்டுவர். அந்த விவகாரங்களை உள்ளத்திற் கொண்டு கம்பனின் மேதையோ,

மானுடம் வென்ற
தன்றே!

என்று சுக்கிரீவன் வாயிலாகத் தன் கொள்கையை வெளியிட்டுக் கொள்கிறது; 'இது அவதார ரகஸ்யத்'தின் ஆழ்ந்த பொருள்' என்பதாக.

கொள்கையின் விசுவரூபம்

சுந்தர காண்டத்திலே, கம்பனுடைய ராமாவதார தத்துவம் மேலும் ஓங்கி விசாலமாகிறது அனுமன் வாயிலாக. யுத்த காண்டத்திலோ இன்னும் அதி விசாலமாக வளர்ந்தோங்குகிறது. விஷ்ணு ஸ்வரூபி திரிமூர்த்தி ஸ்வரூபியாகி உலகத்திலுள்ள எல்லா மதத்தினருக்கும் பொதுவான கடவுளின் அவதாரமாகவும் காட்டப் பெறுகின்றுன்.

மூலபல வதை முற்றுப் பெற்ற பின்பு ராமனுடைய முடிவான — முடிமணியாகிய — தியாகத்தை எல்லாரும் பாராட்டுகிறார்களாம். சிறிய தாயின் சொல்லுக்கு இணங்கித் தம்பிக்கு நாடு கொடுத்த தியாகம் முதற்படி தான். இரண்டாவது படி, காடு சென்று தேவர்களுக்காகவும் தியாகம் புரிந்தது. எல்லாவற்றுக்கும் மேலான தியாகமாக ராட்சஸ வதம் புரிந்ததையே குறிப்பிடுகிறுன் கவிஞன்.

அவர்களும் பரம்பொருளின் அருமை மக்களல்லவா? அந்த மக்கள் ஹிம்ஸை நெறியில் பிறருக்குத் துயரிழைத்ததோடு தங்களுக்கும் துயரை விளைத்துக் கொண்ட வண்ணமாகவே யிருந்தனர். அவர்களைத் திருத்துவதற்கு வேறு வழியே இல்லையாம். கருணைக் கடலாகிய பகவான் வேடனைப்போல் கொலைக் கருவி கைக் கொண்டு தான் அரக்கருள்ளிட்ட அனைவருக்கும் துயர் துடைக்க நேர்ந்ததாம்.

இந்தத் தியாக - சிகரத்தை உலகம் முழுவதும் பாராட்டியதாம். இதைக் கவிஞன்,

தோய்படைத் தொழிலால்
யார்க்கும் துயர்துடைத் -
தானை நோக்கி,

வாய்படைத் துடையார்
எல்லாம் வாழ்த்தினுர்,
வணக்கம் செய்தார்.

[தோய் படை - இரத்தம் தோய்ந்த ஆயுதங்கள்.]

என்று காட்டுகிறுன்.

வாய் படைத்துடையவர்களெல்லாம் (சைவர் வைணவர் மட்டுமல்ல) இந்த அவதார மூர்த்தியை வாழ்த்தி வணங்கினர் என்று கூறுவதிலே, கம்பன் தன்னுடைய காவிய நாயகனை ஸர்வ சமய ஸமரஸ மூர்த்தியாகக் காட்டுகிறுன்.

இப்படி வளர்ந்து வந்திருக்கிறது ராமாவதார தத்துவம், இந்தத் தனிப் பெருங்கவி யுள்ளத்திலே, இந்தத் தமிழ்ப் பெருமக்களின் பேரிதிகாசத்திலே. அவதார ரகஸ்யத்தின் இறுதிச் சிகரம் இது.

முதலாவது சிகரம் மானுடத்தின் வெற்றி. மூன்றுவதாகக் காட்டும் முடிவான சிகரம், கருணைக் கடல் துஷ்ட அசுரர்களுக்கும் துயர் துடைத்து அருளே புரிந்தான் என்பது. இது கருணையின் வெற்றி. இந்த இரண்டு சிகரங்களுக்கும் இடையே தருமத்தின் வெற்றி.

இந்த அவதார ரகஸ்ய நிலை இச் சுந்தரகாண்டத்திலேயே அனுமன் வாயிலாக வெளிப்படுகிறது. திரிமூர்த்தி ஸ்வரூபியாக ராமன் அவதாரம் செய்திருக்கிறுன் என்று வரும் கவிக்கு அடுத்த கவியிலேயே:

அறம்தலை நிறுத்தி,
வேதம் அருள்சுரந்(து)
அறைந்த நீதித்

திறம்தெரிந்(து) உலகம்
பூரணச் செந்நெறி
செலுத்தித் தீயோர்

இறந்(து) உக நூறித்
தக்கோர் இடர்துடைத்(து)
ஏக ஈண்டுப்

பிறந்தனன் தன்பொற்
பாதம் ஏத்துவார்
பிறப்(பு)அ றுப்பான்,

[தலைநிறுத்தி — நிலைநாட்டி. பூண — மேற்கொள்ள. உக — ஒழிய. நூறி — அழித்து. தக்கோர் — நல்லவர்கள்.]



சுந்தர ராமாயணம்

பி.ஸ்ரீ.

60. அம்பும் எதிரம்பும்

சாதுக்களைப் பரிபாலிக்கவும் துஷ்டர்களை நாசம் செய்யவும் அறத்தை நிலை நிறுத்தவும் யுகந்தோறும் யுகந்தோறும் தான் பிறப்பதாகக் கண்ணன் பகவத் கீதையில் கூறியுள்ள அவதார தத்துவத்திற்குக் கம்பனுடைய விளக்க உரையைக் காண்கிறோம்,

அறம்தலை நிறுத்தி

என்று தொடங்கும் கவியிலே.

கீதை சுலோகத்தின் உயிர்நிலை அதன் மூன்றாவது அடியாக அமைந்திருக்கிறது. அதைக் கம்பன் எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிட்டு அதற்குரிய விளக்கத்தையும் தொடர்ந்து குறிப்பிடுகிறான்,

அறம்தலை நிறுத்தி
வேதம் அருள்சுரந்(து)
அறைந்த நீதித்
திறம் தெரிந்(து) உலகம்
பூணச் செந்நெறி
செலுத்தி

என்பதாக.

துஷ்டச் செயல்கள் புரிவோரை நாசஞ் செய்ய அவதரிப்பதாய்க் கண்ணன் கூறுவதுதான், 'தீயோர் இறந்துக நூறி' என்று வருகிறது, கம்பன் பாட்டிலே. சாதுக்களைப் பரிபாலிக்க வருவதாய்க் கண்ணன் எடுத்த எடுப்பிலே கூறியிருப்பது 'தக்கோர் இடர் துடைத்து ஏக' என்று இப்பாட்டில் அமைந்திருக்கிறது.

வேதம் ஓதிச் சூடு போட்டது!

யுகந்தோறும் யுகந்தோறும் தான் ஸம்பவிப்பதாய்க் கண்ணன் கூறுவது இங்கே 'ஈண்டுப் பிறந்தனன்' என்று வருகிறது. இத்தகைய அவதார மூர்த்தியைச் சரணாகதி செய்வதே முக்தி நெறி; உலகில் வாழும் நெறியும் இது என்பதாக முடிகிறது, கம்பன் அனுமன் வாயிலாகக் கூறும் அவதார வைபவம்.

மும்மூர்த்திகளும் சேர்ந்து ராமனாக அவதரித்ததாய்க் கூறிவிட்டு ஸ்ரீ கீதாசாரியனின் கொள்கையையும் விளங்க வைக்கும் முறையில் அமைந்திருக்கிறது, அனுமன் ராவணனிடம் முழக்கும் அவதார வைபவம்.

இவ்வளவு உத்ஸாகத்திற்கிடையே ராவணனுடைய முகத்தைப் பார்த்ததும் சோர்வே இல்லாத அனுமனுக்கும் சோர்வு தான்! ஒரு முகமான நினைவுதானில்லையே ராவணனுக்கு: பத்து முகங்களும் பத்து முகமாக அல்லவோ தொழிற்படுகின்றன? காம வெறியும் ஆதிக்க மதமும் கொழிக்கின்ற முகங்கள் மதம் பிடித்த வண்டு போலத் திரியும் மனத்தையல்லவா வெளியிடுகின்றன?

அனுமனுடைய பக்தி – உத்ஸாகம் உடனே அடங்கிப் போகின்றது. 'இவன் முன் இவ்விதமாகப் பேசுவதில் என்ன பயன்?' என்ற எண்ணம் குறுக்கிடப் பேச்சை விரைந்து முடிக்கிறான்.

அடுத்த பாட்டிலேயே முடித்துக் கொள்கிறான்.

*அன்னவற்(கு) அடிமை
செய்வேன் ; நாமமும்
அனுமன் என்பேன்*

[அன்னவற்கு – அத்தன்மையுள்ள ராமனுக்கு.]

என்று உடனே தன்னைத் தெரிவித்துக் கொள்கிறான். 'அந்த ராவணுகாரமான மதத்திற்கு இங்கே இப்போதே சரியான ஒரு மருந்து தேட வேணும்' என்றும் தீர்மானிக்கிறான்.

சொல்லின் செல்வனல்லவா? உடனே தீர்மானம் சொல்லாக உருப்படுகிறது. ராமதூதனாக அல்லவா முதன் முதல் தன்னை அறிவித்துக் கொண்டான்? இப்போது 'ராமனுக்கு அடிமை' என்று சொல்லி விட்டு, 'அவனுடைய அடியாருக்கும் அடியேன்' என்ற சம்பிரதாயத்திலே பேசி முடிக்கிறான்.

இது செய்யுளின் வெளிப்படையான அமைப்பு. உள்ளுக்குள்ளே ராவண கர்வத்திற்கு ஒரு சூடு, ஒரே சூடு! எப்படியாவது அந்தச் சபையில் வாலி பெயரைச் சொல்லி விட்டாலே போதுமல்லவா?

வாலியிடம் ராவணன் அடைந்த படு தோல்வியை அனுமனைத் தவிர வேறு யாரே நினைவூட்ட முடியும்? இந்தச் சொல்லின் செல்வனைத் தவிர வேறு யாரே இவ்வளவு சாமர்த்தியமாக நினைவூட்ட முடியும்?

*'அன்னவற்(கு) அடிமை
செய்வேன் ; நாமமும்
அனுமன் என்பேன் ;*

*நன்னுதல் தன்னைத்
தேடி, நாற்பெருந்
திசையிற் போந்த*

*மன்னரில், தென்பால்
வந்த தானைக்கு
மன்னன் வாலி*

*தன்மகன் ; அவன்தன்
தூதன், வந்தனென்
தனியேன் !' என்றான்.*

[நன்னுதல்–அழகிய நெற்றியையுடையவள் ; (இங்கே) சீதை. தானை–சேனை. மன்னன்–(இங்கே) தலைவன்.]

சீதையைத் தேடித் தெற்கே வந்த தலைவன் அங்கதனானதால், 'அந்த வாலி மகனுக்குத் தூதனாய் வந்தேன்' என்று சொல்லி முடிக்கிறான். அங்கதன் இளைஞனானதால் பிரசித்தனான தந்தையின் பெயரால் குறிப்பிட வேண்டுமென்பது வெளிப்படையான காரணம். வாலி பெயரை இப்படி உபயோகித்துக் கொண்ட கொடுமைக்கு ஒரு சாந்தி பரிகாரம்போல் முடிகின்றது கவி,

*'வந்தனென் தனியேன்'
என்றான்*

என்பதாக.

'அடடா, எவ்வளவு அசந்தர்ப்பமாக இந்தக் குரங்கு அந்தக் குரங்கின் பெயரைச் சொல்லி விட்டதே! இதனால் கௌரவக் குறைவு ஏற்படக்கூடாது!' என்று ராவணன் எவ்வளவு முன் ஜாக்கிரதைப்படுகிறான்! அறிவுச் செல்வத்தில் குறைந்தவனில்லையே ராவணன்.

கடகடவென்று சிரிக்கிறான். சிரித்துக் கொண்டே 'இன்னது செய்வோம்' என்பதாகப் பளிச்சென்று முடிவு செய்து விட்டு, வாலி தனக்கு நெருங்கிய நண்பன் என்பதைக் குறிப்பாகச் சபை அறிந்து கொள்ளும்படி யோக க்ஷேமம் விசாரிக்கிறான்.

'என்னுடைய நண்பனுடைய மகனுடைய தூதன் தானே!' என்ற அலட்சியமும் சிரிப்பிலே தொனிக்கிறது ;

*என்றலும், இலங்கை
வேந்தன் எயிற்றினம்
எழிலி நாப்பண்*

*மின்திரிந் தென்ன
நக்கு, 'வாலிசேய்
விடுத்த தூதா !*

*வன்திற லாய
வாலி வலியன்கொல்?
அரசின் வாழ்க்கை*

*நன்றுகொல் ?' என்ன
லோடும், நாயகன்
தூதன் நக்கான்.*

(எயிற்றினம் — எயிறு + இனம் — பல் வரிசை. எழிலி — மேகம். நாப்பண் — நடுவில். நக்கு — சிரித்து. வன்திறல் வல் + திறல் — மிக்க பலம். வலியன்— சௌக்கிய நிலையில் உள்ளவன்]

'மேகத்தின் நடுவிலே மின்னல் திரிவதுபோல் கோரப் பற்கள் பிரகாசிக்கச் சிரித்தான்' என்று கூறுவது லங்கேச்வரனின் உக்கிரமான முகத் தோற்றத்தைப் பயங்கரமாகக் கண் முன் கொண்டு வந்து காட்டுகிறது. 'வாலி சேய் விடுத்த தூதா!' என்ற விளியிலே, 'வாலி குழந்தை என்றால் நம் குழந்தை

தானே! அவனுடைய வேலைக்கார னென்றால் நமக்கும் வேலைக்காரன் தானே!' என்ற பொருளும் தொனிக்கிறது.



'உன்னை நான் யாரோ ஒரு பகைவன் அல்லது பகைவனுக்கு வேண்டியவன் என்றல்லவா சந்தேகித்து விட்டேன்? நீ தானா இங்கே இவ்வளவு ஆர்ப்பாடம் செய்து விட்டாய்? அது இருக்கட்டும், மகா பலசாலியான நம்முடைய வாலி க்ஷேமந்தானே?' என்று க்ஷேம விசாரணை தொடங்குகிறான். 'அவனுடைய அரசாட்சி நன்றாக

நடந்து வருகிறதா?' என்று படாடோபமாகக் கேட்கிறான்.

இந்த அதிரடிக்காரனுக்கு எதிரிடையாக அனுமனும் ஒரு சிரிப்பைப் பிரயோகிக்கிறான். 'இவன் தம்பி கும்பகர்ணன் தானே எப்போதும் உறங்கிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம்? இந்த முத்தண்ணுவும் உலக நடப்பை அறியாமல் கண்ணைத் திறந்தபடியே உறங்கிக் கிடக்கிறானே!' என்ற இகழ்ச்சி அனுமனுடைய அடக்கமான சிரிப்பிற்குள்ளே நெருப்பாயிருக்கிறது.

தான் வைத்த 'பொறியில் எலி மாட்டிக் கொண்டது!' என்பதை அறிந்த அனுமன் எவ்வளவு குதூகலமாய் நகைச்சுவை ததும்ப வாலிவதைச் செய்தியைத் தெரிவிக்கிறான் பாருங்கள்:

'அஞ்சலை அரக்க!
பார்விட்(டு) அந்தரம்
அடைத்தான் அன்றே;

வெஞ்சின வாலி
மீளான்; வாலும்போய்
விளிந்த தன்றே;

அஞ்சன மேனி
யான்தன் அடுகணை
ஒன்றால் மாழ்கித்

துஞ்சினன்; எங்கள்
வேந்தன் சூரியன்
தோன்றல்!' என்றான்.

[பார் — இந்த நில உலகம். அந்தரம் — வானுலகம். மீளான் — திரும்பிவர மாட்டான். விளிந்தது — அழிந்தது. அஞ்சன மேனியான் — ராமன். அடு — (பகை) அழிக்க வல்ல. மாழ்கி—வருந்தி. தோன்றல் — மகன்.]

'அஞ்சாதே ராட்சஸா!' என்ற பீடிகையிலேயே, வாலி பெயரைக் கேட்டதும் ராவணனுடைய நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது என்றும், உடம்பே நடுங்கியது என்றும் விளம்பரப் படுத்துகிறான். அதை மறைக்கத்தான் அரக்கன் அப்படிச் சிரித்தானும்; அப்படிப் பேசினானும்.

'ஆனால் என்னிடம் அந்த நடுக்கத்தை மறைத்துக் கொள்ள முடியுமா?' என்று கேட்பது போலவும், ஏதோ அபயதானம் செய்வது போலவும் பீடிகையே பேசுகிறது. 'இனி அப்படிப்பட்ட பயத்திற்கு அவசியமில்லை' என்கிறான்.

'அவன் இப்போது பூமியில் இல்லை!' என்கிறான். இதனாலும் ராவணனுக்குப் பயம் நீங்கவில்லை என்று கருதியது போல்,

அந்தரம் அடைந்தான்
அன்றே!

— 'அன்றே வானுலகம் போனான்!' என்று சில மாதங்களுக்கு முன் நடந்ததைச் சுருக்கமாகச் சொல்லுகிறான்.

'அந்த லோகத்திலும் ஒருவேளை சண்டைக்குத் தான் போயிருக்கிறானோ!' என்று பயப் பிராந்தனாகிய ராவணன் சந்தேகிக்கக் கூடுமாம். எனவே, 'வெஞ்சின வாலி மீளான்!' — செத்துப்போனவன் திரும்பி வரமாட்டானப்பா! — என்றும் உறுதி கூறுகிறான்.

'வாலி கூட வேண்டாம் ராவணனைப் பய முறுத்த, அந்த வாலே போதும்!' என்பதையும் குறிப்பிடவேண்டுமென்று 'வாலியும் போனான், வாலும் போச்சு' என்று சொல்லும் தோரணையில்,

வெஞ்சின வாலி
மீளான்; வாலும்போய்
விளிந்த தன்றே!

என்கிறான்.

இப்படி வாலை ஞாபகப்படுத்தும் போது எவ்வளவோ காலத்திற்குமுன் எங்கேயோ ஓரிடத்தில் வாலியின் வாலால் கட்டப்பட்டு ராவணன் பரிதாபமாகத் தொங்கி ஊஞ்சலாடிய காட்சி எவ்வளவு தத்ரூபமாக இந்தச் சபையிலே பிரத்தியட்சமாகிறது! சிங்காதனத்திலே தான் கொலு வீற்றிருக்கிறான் ராவணன் உண்மையில். எனினும் இவ்வளவு உண்மையாக இதே ராவணன் கஷ்டப்பட்டு வாலிலே ஊஞ்சலாடுவதும் பிரத்தியட்சமாக் காணப்படுகிறது, ராவணன் உள்ளிட்ட சபையோருக் கெல்லாம்.

இது அனுமனுடைய சொல்லின் செல்வம்; கம்பனுடைய மந்திரக் கவிதை.

இவ்வளவு பரிகாசத்திற்கும் பின்பு வாலி நோயால் செத்துப் போகவில்லை என்பதையும் குறிப்பிக்கிறான். முடிவில், 'வாலி தொலைந்து ஒரு பெரிய அரசியல் புரட்சி ஏற்பட்டிருப்பதுகூட உனக்குத் தெரியவில்லையே அப்பா!' என்று இடித்துக் கூறுவது போல் ஓர் உணர்ச்சு ஏற்படுகிறது.

அவதார தத்துவப் பேச்சைத் தொடர்ந்து இந்த ஹாஸ்ய சம்பாஷணை அமைந்திருப்பது, கலைத் திறனுக்கும் நாடகப் பணிபிற்கும் ஒரு தக்க சான்று.